விலை : 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 06 சனிக்கிழமை (22.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 277

## ஏற்ற காலத்தில் ஒரு நியாயமான அரசியல் தீர்வு எட்டப்பட்டிருந்தால் யுத்தத்தை தவிர்த்திருக்கலாம்



### ஜப்பான் உயர் ஸ்தானிகரிடம் கூட்டமைப்பின் தலைவர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

ஏற்றகாலத்தில் நியாயமான ஓர் அரசியல் தீர்வு எட்டப்பட்டிருந்தால் கடந்தகால யுத்த சூழ்நிலையை தவிர்த்திருந்திருக்கலாம் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜப்பான் உயர் ஸ்தானிகரிடம் எடுத்துரைத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி முறையை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சமஷ்டி முறைமையைச் சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் 23☛

புலமைப்பரிசில் பெறுபேறு

## ஒக்டோபர் முதல் வாரம் வெளியாகும்

(கொழும்பு)

2018ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 24☛

## வீதியில் பயணித்தவரை கடத்தி அவரின் உடமைகள் கொள்ளை

### உடுப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உடுப்பிட்டி பகுதியில் இரவு வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பொதுமகனை கடத்திச்சென்ற கும்பலொன்று அவரிடமிருந்த உடமைகளை கொள்ளையிட்டு சென்ற சம்பவமொன்று கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியை சேர்ந்த குறித்த நபர் மரணவீடொன்றில் கலந்துகொள்ளவென பேருந்தில் பயணித்து உடுப்பிட்டிக்கு சென்றுள்ளார். 23☛

அரசியல் கைதிகளுக்காக போராட்டம்

## ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலையை வலியுறுத்தி உணவுதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்காக போராடுவோமென பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பல்கலைகழக மாணவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 14 ஆம் திகதி 23☛

வவுனியா – தாண்டிக்குளத்தில்

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைது



(வவுனியா)

வவுனியா - தாண்டிக்குளம் தொடருந்து நிலையத்திற்க 23☛

## தமிழ்க் கட்சிகள் இணங்கியிருந்தால் எப்போதே இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டிருக்கும்



### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வுகள் குறித்து முன்வைத்த யோசனைகளுக்கு அன்று தமிழ்க் கட்சிகள் இணங்கியிருந்தால் நாடு புதியதொரு வரலாற்றில் பயணித்திருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்த ஆட்சியில் மீண்டும் தீர்வுகள் குறித்த நகர்வுகளை முன்னெடுத்து 23☛

அரசியல் பழிவாங்கலுக்கே

## தமிழரசுக் கட்சி என்மீது வழக்கு

### சட்டத்தரணி மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

எனக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள குற்றவியல் வழக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மற்றொரு அரசியல் பழிவாங்கல் என யாழ். மாநகர சபை 23☛

## மாகாண சபை எல்லை மீளாய்வு அறிக்கை காலதாமதமாகும்

### எல்லை நிர்ணய அறிக்கை குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் எல்லை நிர்ணய அறிக்கையை சமர்ப்பிக்க மேலும் இரண்டு மாதகால அவகாசம் தேவை என மாகாணசபை எல்லை நிர்ணய அறிக்கை மீளாய்விற்காக நியமிக்கப்பட்ட ஐவர் அடங்கிய குழு, சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் தெரிவித்துள்ளது. 23☛

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் கவனயீர்ப்பு போராட்டம்




03☛

## மோட்டார் சைக்கிள் மோதியதில் நடந்து சென்றவர் உயிரிழப்பு

### புத்தூர் மீசாலை வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்ற இளம் குடும்பத் தலைவர் மீது மோட்டார் சைக்கிளினை செலுத்தி வந்தவர் பின்பக்கமாக மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் புத்தூர் மீசாலை பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் புத்தூர் ஊறணி பகுதியைச் சேர்ந்த இரத்தினம் மோகன் 24☛

## ஐ.நா கூட்டத்தில் பங்கேற்க ஜனாதிபதி அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 73ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவிற்கு பயணமாகவுள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரை 23☛

## முதியவரின் மோதிரங்களை அபகரித்த கர்ப்பிணிப்பெண்

### தெல்லிப்பழை வைத்தியசாலையில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வந்த முதியவரின் மோதிரங்கள் இரண்டை கொள்ளையடித்துத் தப்பிக்க முயன்ற கர்ப்பவதிப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் இடம்பெறும் மாதாந்த சிகிச்சைக்காக நேற்று முன்தினம் முதியவர் ஒருவர் சென்றுள்ளார். 23☛

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



# கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் சிவாலய பொதுக்கூட்ட அழைப்பு

உருத்திரபுரீஸ்வரர் சிவாலய பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் 07.10.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு நா.உலகநாதன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

- இறை வணக்கம்
- தலைமை உரை
- செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
- செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
- பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
- அடியவர்களின் ஆலய வளர்ச்சி தொடர்பான ஆலோசனைகள்
- சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள்
- யாப்பு திருத்துவதற்கு முன் அனுமதி கோரல்
- புதிய அறங்காவலர் சபை தெரிவு
- நன்றியுரை

சிவாலய அங்கத்தவர்கள், உபயகாரர்கள், சிவனடியார்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

**செயலாளர்**
**உருத்திரபுரீஸ்வரர் சிவாலய அறங்காவலர் சபை**
**உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்,**
**கிளிநொச்சி.**

குறிப்பு:-ஆலய அபிவிருத்தி தொடர்பான பிரேரணைகள் ஏதுமிருப்பின் 01.10.2018இற்கு முன்னர் செயலாளரிடம் எழுத்து மூலம் ஒப்படைக்கவும். (சி-3892)

## விற்பனைக்கு

யாழ்.ரக்கா றோட்டின் முன் ரக்கா லேனில் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு.

**தொடர்புகள்:0764734160** (575)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கோழி இறைச்சி (குளிரூட்டப்பட்ட பக்கற்) கம்பனிக்கு விற்பனை பிரதிநிதி தேவை.

127, K.K.S Road, Jaffna (5737)

**தொடர்புகளுக்கு:0773897314**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் ஆறுமுகம் பொன்னையா சுப்பிரமணியம்

எமது பாடசாலை ஆசிரியை திருமதி தாரணி ஜெயசீலன் அவர்களின் அன்புத் தந்தை ஆறுமுகம் பொன்னையா சுப்பிரமணியம் அவர்கள் கடந்த 09.08.2018 அன்று இறைபதம் எய்திய செய்தி அறிந்து துயரடைகிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர் குழாம் (பாடசாலைச் சமூகம்)
யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமதி பாமினி வசிகரன்

(ஆசிரியை-யா/கம்பர்மலை மகா வித்தியாலயம்)



எமது மருமகள் 30.08.2018 அன்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கௌரவ அ.பிரேம்சங்கர் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இளம் வயதில் இக் கௌரவப் பட்டத்தை பெற்றமையையிட்டு பெருமைப்படுகின்றோம். (6763)

வாழ்த்துவோர்:-
திரு.திருமதி இராசேந்திரம் ஜெயா (ஜொக்குமாமா - சுவிஸ்)
திரு.திருமதி இராசரத்தினம் அமுதா (ஆசை மாமா-சுவிஸ்)
திரு.திருமதி இரவீந்திரன்-லதா (குட்டிமாமா-சுவிஸ்)
திரு.திருமதி இராஜேஸ்வரன் கிறிஸ்ரியா (சின்ன மாமா-சுவிஸ்)
திரு.திருமதி இராமச்சந்திரன் றஜனி (உங்கி மாமா-சுவிஸ்)


# வல்லிபுர ஆழ்வார் திருவிழாவையொட்டி

25% கமராக்களும் 5% விலைக்கழிவில் மின்படலும் பொருத்திக்கொடுக்கப்படும்

2 வருட உத்தரவாதம் +
3 வருட பராமரிப்புடன்
பொருத்திக்கொடுக்கப்படும்

10 வருட(இரட்டை) உத்தரவாதம்
25 வருட(இரட்டை) பாவனை உத்தரவாதம்
+ 5 வருட பராமரிப்பு

கோயில் முன்வளாகத்தில்






மதுரம் அருந்தகத்துக்கு அருகமையில் (கரும்புச்சாறு)

4 Cameras + DVR + Harddisk + PowerSupply 10Amp
BNCs + DCs + 50m 3c2v + Powercable
+ Installation + 3 AMC + 1 Page WebSite 5 Year

66,660/-
55,000/-

5 வருடத்தில் கட்டணமின்றிய மின் பாவனை
நீங்களும் மின் உற்பத்தியாளராகலாம்
மின்சாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டது

500 மேற்பட்ட இடங்களில் பொருத்தி வடக்கில் உங்களில் பலரின் நம்பிக்கையை பெற்றுள்ளோம்!

HIKVISION
AUTHORIZED GOLD
VALUE ADDED SOLUTION
PATNER

SST

## சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்

தகவல் தொழில்நுட்பம் & பாதுகாப்பு கருவிகள் வழங்குனர்
இல.: 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொடர்புக்கு.: 0212217994/ 0775527099 முகநூல்: sunsakthy traders
இணையம்.: sunsakthy.com மின்னஞ்சல்.: info@sunsakthy.com

HIKVISION
AUTHORIZED GOLD
DEALER
PARTNER

# அரசே! அனைத்து அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பில் விடுதலை செய்

## யாழில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகள் 8 பேர் கடந்த வெள்ளிக்கிழமை (14.09.2018) தொடக்கம் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருன்றனர்.

அவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்று, அனைத்து அரசியல் கைதிகளையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே விலக்கு , உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் உயிரைப் பறிக்காதே, நல்லாட்சி அரசே ஏமாற்றாதே, வாய்ப் பேச்சில் நல்லிணக்கம் வதைப்பது அரசியல் கைதிகளையா? நல்லாட்சி அரசே வாக்குறுதி என்னாச்சு, நல்லாட்சி அரசே உயிர்களைக் கொல்லாதே என பதாகைகள் ஏந்தியவாறு கோசங்களை எழுப்பியிருந்தனர்.




இந்தப் போராட்டத்தில் அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (இ-9-89-101)

---

**இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு இந்தியா துணை**

## காங்கிரஸிற்கு எதிராக அ.தி.மு.கவின் போராட்டம் வரவேற்கத்தக்கது-பா.ஜ.க.

(சென்னை)

இலங்கை அரசின் போர்க்குற்றத்திற்கு இந்தியாவும் துணைபோனதென இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள நிலையில், அ.தி.மு.க. நடத்தவுள்ள கண்டனப் பேரணி வரவேற்கத்தக்கதென தமிழகத்தின் பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

"இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு இந்தியாவும் உதவியது என்பதை, அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

எனவே அந்தக் காலத்தில் ஆட்சியில் இருந்தது காங்கிரஸ் -தி.மு.க. கூட்டணியாகும். குறித்த குற்றச்சாட்டிற்கு இதுவரை காங்கிரஸ் அல்லது தி.மு.க. உரிய பதில் வழுங்கவில்லை.

இவ்வாறு போர்க்குற்றம் புரிந்தவர்கள்தான் அடுத்து ஆட்சிக்கு வரவேண்டும் எனக் கூறும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் மற்றும் திருமாவளவன் ஆகியோர் இப்போது என்ன கூறப் போகிறார்கள்?

இந்நிலையில், காங்கிரஸ் தி.மு.க. கூட்டணியில் ஒரு போர்க்குற்றம் இடம்பெற்றுள்ளது என்பதை கண்டிக்கும் வகையில், அ.தி.மு.க. நடத்தும் போராட்டம் வரவேற்கத்தக்கது" என தமிழிசை மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, போர் வெற்றிக்கு இந்தியா காரணம் என்றும் இந்தியாவின் ஆதரவுடன்தான் போர் நடத்தப்பட்டதாகவும் கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க விமல், பிரசன்னவுக்குத் தடை




(கொழும்பு)

பொது எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர்க்ளான விமல் வீரவன்சவுக்கும், பிரசன்ன ரணவீரவுக்கும் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஒழுங்கு விதிகளை மீறியமையினால் இவர்களுக்கு எதிராக நேற்றுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வாக்கெடுப்பின் மூலம் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி விமல் வீரவன்சவுக்கு இரண்டு வார கால தடையும், பிரசன்ன ரணவீரவுக்கு நான்கு வார கால தடையும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## ஷிராந்தியின் வாகனத்திலேயே வசீம் தாஜுடீன் கடத்தப்பட்டார் சி.ஐ.டி.யினர் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுடீன், மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் டிபெண்டர் வாகனத்தில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என சி.ஐ.டிக்குக் கிடைத்துள்ள தகவலை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மேலதிக நீதவானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி சொலிசிட்டர் ஜெனரால் டிலான் ரத்நாயக்க, வசீம் தாஜுடீன் விவகாரத்தை விசாரணை செய்யும் சி.ஐ.டியின் மனிதப் படுகொலை குறித்த விசாரணைப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்குஹெட்டி, பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முணசிங்க, சார்ஜன் ரத்னப்பிரிய ஆகியோருடன் மேலதிக விசாரணை அறிக்கையை மன்றில் தாக்கல் செய்து இந்த விடயத்தை நீதவானுக்கு அறிவித்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு பாதுகாப்பளித்த கடற்படை வீரர்கள் தொடர்பிலான விபரங்களை வழங்க கடற்படை தளபதி மறுப்பாராயின், அவருக்கு எதிராக தண்டனை சட்டக் கோவையின் 173 மற்றும் 174 ஆவது அத்தியாயங்களின் கீழ் செயற்பட்டு நடவடிக்கை எடுக்குமாறும் இதன் போது நீதவான் இசுரு நெத்திகுமார சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும், சி.ஐ.டிக்கும் ஆலோசனை வழங்கினார்.

மேலும் இந்தக் கடற்படை வீரர்கள் தொடர்பில் தகவல்கள் மறைக்கப்படுவது தொடர்பில் அத்தகவல்களுக்கு பொறுப்பான உயர் கடற்படை அதிகாரி ஒருவரை விசாரணைக்கு அழைத்துள்ளதாகவும் அவரிடம் எதிர்வரும் 25 ஆம் திகதி விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்னாயக்க நீதவானுக்கு அறிவித்தார்.

நேற்று வசீம் தாஜுடீன் கொலைவழக்கு விசாரணைக்கு வந்தபோது, இந்த விவகாரத்தில் கைதாகி பிணையில் உள்ள நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேரா , முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க, முன்னாள் கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பிரான்ஸ் நாட்டின் அதி உயர் விருது



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு பிரான்ஸ் நாட்டின் அதி உயர் விருது வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் பிரான்ஸ் நாட்டின் அதி உயர் கௌரவ விருதைப் பெற்ற முதலாவது இலங்கையராக சந்திரிகா திகழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்தநாள் துடுப்பாட்டத்தில் தூள்கிளப்பிய ரஷிட்

## பங்களாதேஷை ஆட்கொண்டது ஆப்கானிஸ்தான்



அரைச்சதமடித்து தூள்கிளப்பிய ஆப்கானின் ரஷிட் கான்

சுழல் மன்னன் ரஷிட் கான் 'சக்லதுறைகளி லும் ஜொலிக்க ஆப்கானிஸ் தான் அணி 136 ஓட்டங் களால் அபார வெற்றி பெற் றது.

ஐக்கிய அரபு எமி ரேட்ஷில் (யு.ஏ.இ.) 14 ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது.

அபுதாபியில் நட ந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் ஆப் கானிஸ்தான், பங் களாதேஷ் அணி கள் மோதின. பங்களாதேஷ் அணியில் அபு ஹைதர், நஜ்முல் ஹொ சைன்ஷா ன்டோ அறிமுகமாகினர்.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணியின் தலைவர் அஸ்கர் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**சகிப் அசத்தல்**

ஆப்கானிஸ்தான் அணிக்கு மொஹமட் ஷாசாட், இஷானுல்லா ஜோடி ஆரம்பம் கொடுத்தது. அபு ஹைதர் வீசிய 2ஆவது ஓவரில் இஷானுல்லா தொடர்ச்சியாக 2 பவுண்டரிகள் விளாசினார். பின் எழுச்சி கண்ட ஹைதர் 'வேகத்தில்' இஷானுல்லா (8). ரஹ்மத் ஷா (10) ஆட்டமிழந்தார்.

பொறுப்பாக ஆடிய மொஹமட் ஷாஜத். ஹஷ்ம துல்லா ஷஹிதி ஜோடி ஓரளவு ஓட்டங்கள் சேர்த்தது. மூன்றாவது விக்கெட்டுக்காக 51 ஓட்டங்கள் சேர்த்த போது சகிப் அல் ஹசன் 'சுழலில்' ஷாஜத் (37) சிக்கி னார். மொமினுல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஷஹிதி, அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து அசத்திய சகிப் பந்தில், அணித் தலைவர் அஸ்கர் (8), சமி யுல்லா ஷென்வானி (18) போல்டாகினர்.

**ரஷிட் விளாசல்**

ரூபெல் ஹொசைன் 'வேகத்தில்' ஷஹிதி (58) வெளியேறினார். அடுத்து வந்த குல்பதின், ஹைதர் வீசிய 42ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்தார். ரூபெல் ஹொசைன் வீசிய 45வது ஓவரில் அடுத்தடுத்து ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ரஷிட் கான், மொர்டசா வீசிய 48 ஆவது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். மொர்டசா வீசிய கடைசி ஓவரில் 4 பவுண்டரிகள் விரட்டிய ரஷிட், 31 பந்துகளில் அரைச்சதமடித்தார். இது ஒருநாள் போட்டியில் இவரது 3ஆவது அரைச்சதமானது.

50 ஓவர்கள் நிறைவில் ஆப்கானிஸ்தான் 7 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்கள் எடுத் தது. ரஷிட் கான் (57), குல்பதின் (42) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் சகிப் 4, ஹைதர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**மொர்டசா ஏமாற்றம்**

சவாலான இலக்கை விரட்டிய வங்கதேச அணி க்கு நஜ்முல் ஹொசைன் ஷான்டோ (7), லிட்டன் தாஸ் (6) ஏமாற்றினர். குல்பதின் பந்தில் மோமினுல் (9), மொஹமட் மிதுன் (2) வெளியேறினர்.

ரஷிட் கான் 'சுழலில்' சகிப் (32), மகமதுல்லா (27) சிக்கினர். அடுத்து வந்த மெஹிடி ஹசன் மிராஸ் (4), அணித் தலைவர் மொர்டசா (0), அபு ஹைதர் (1), ரூபெல் ஹொசைன் (0) நிலைக்க வில்லை.

இறுதியில் பங்களாதேஷ் அணி 42.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 119 ஓட்டங் களை மட்டுமே எடுத்து 131 ஓட்டங்களால் தோல்வி யைத் தழுவியது. மொசாதக் (26) ஆட்டமிழக் காமல் இருந் தார்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பில் ரஷிட் கான், குல்பதின். முஜீப் உர் ரஹ்மான் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றின்ர்.

**112 விக்கெட்டுக்கள்**

'சுழலில்' அசத்திய ரஷிட் கான் இப்போட்டியில் 2 விக் கெட்டுக்களைக் கைப்பற் றினார். இதுவரை இவர், 49 போட்டிகளில் 112 விக்கெட்டுக்களை வீழ் த்தி உள்ளார். இதன் மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில் அதிக விக்கெட் டுக்கள் சாய்த்த ஆப்கா னிஸ்தான் வீரர்கள் பட்டிய லில் மொஹமட் நபியுடன் (112 விக்கெட், 103 போட்டி) முதலிடத்தை பகிர்ந்து கொண் டுள்ளார்.

**'ஹப்பி பெர்த்டே'**

தனது 20ஆவது பிறந்த நாள் (செப். 20) கொண்டாடிய ரஷிட் கான் (57) ஒருநாள் அரங்கில் தனது 3ஆவது அரைசதம் கடந்தார்.

## 'கேல் ரத்னா' ஹோலி

இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி விளை யாட்டின் உயரிய 'கேல் ரத்னா' விருது பெறுகிறார். இதற்கான அறி விப்பை மத்திய விளையாட்டு அமைச்சகம் வெளியிட்டது.

சர்வதேச விளையாட்டு அரங்கில் சிறப்பாக செயல்பட்ட இந் திய நட்சத்திரங்களுக்கு இந்திய நாட்டின் உயரிய விளையாட்டு விருதான 'ராஜிவ் கேல் ரத்னா' விருது வழங்கப்படும்.

இதற்கு கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலி, பளுதூக்குதல் வீராங்கனை மீராபாய் சானு பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. இதை மத்திய விளையாட்டு அமைச்சகம் ஏற்றுக் கொண்டது. எதிர்வரும் 25ஆம் திகதி நடக்கும் விழாவில் விருது வழங்கப்பட உள்ளது.

**மூன்றாவது வீரர்**

ஐ.சி.சி., 'நம்பர் 1' டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான ஹோலி, சர்வதேச அரங்கில் அதிக சதமடித்த (58) இந்திய வீரர்கள் பட்டியலில் சச்சினுக்கு (100 சதம்) அடுத்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இதுவரை 71 டெஸ்ட் (6147 ஓட்..), 211 ஒரு நாள் (9779), 62 'ரி20' (2102) போட்டிகளில் பங்கேற்று உள்ளார். சச்சின் (1997), தோனிக்கு (2007) பின் கேல் ரத்னா விருது வென்ற மூன்றாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமை பெற் றுள்ளார்.

## மெஸி ஹட்ரிக்



பந்தை பாஸ் செய்யும் மெஸி

யூரோ சம்பியன்ஸ் லீக்கில் மெஸ்சி ஹட்ரிக் கோல் அடித்தார்.

ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் கூட்ட மைப்பு சார்பில் ஆண்டுதோறும் சிறந்த கழக அணிகளுக்கு இடையில் சம்பியன்ஸ் லீக் தொடர் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி 2018-19ஆம் ஆண்டிற் கான தொடர் தொடங்கியது. இதில் 32 அணிகள் பலப்பரீட்சை நடத்து கின்றன. இந்த அணிகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் இடம்பிடித்துள்ளன. இந்த அணிகள் தங்களது பிரிவில் உள்ள மற்றைய அணிகளுடன் தலா இரண்டுமுறை மோத வேண்டும்.

புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

ஒரு ஆட்டத்தில் 'பி' பிரிவில் இடம்பிடித்துள்ள ஸ்பெயின் நாட்டின் முன்னணி கழகமான பார்சி லோனா நெதர்லாந்தின் பிஎஸ்வி எய்ன்டோவன் அணியை எதிர்கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதலே மெஸ்சி அபார மான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

32ஆவது நிமிடத்தில் மெஸ்சி முதல் கோலை பதிவு செய்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் பார்சிலோனா 1-0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்தில் ஆட்டத்தின் 77 மற்றும் 87ஆவது நிமிடங்களில் மெஸ்சி அடுத்தடுத்து கோல் அடித்தார். இதற்கிடையில் டெம்பேள் 75 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க பார்சிலோனா 4-0 என வெற்றி பெற்றது.

## ரொனால்டோ ரெட் கார்ட்



ரெட் கார்ட் பெற்ற ஏமாற்றத்தில் ரொனால்டோ

யூரோ சம்பியன்ஸ் லீக்கின் மற்றொரு ஆட்டத்தில் 'எச்' பிரிவில் இடம்பிடித்துள்ள இத்தாலியின் முன்னணி கழகமான யுவான்டஸ், வலென்சியாவை எதிர் கொண்டது.

யுவான்டஸ் அணியில் கிறிஸ்ரி யானோ ரொனால்டோ இடம்பிடித் திருப்பதால், அந்த அணி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்தது.

முதல் பாதி ஆட்டத்தில் ஆட்டம் பரபரப்பாக சென்றது. ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் யுவான்டஸ் அணிக்கு 'ப்ரீ ஹிக்' வாய்ப்பு கிடைத் தது.

அதன்போது கிறிஸ்ரியானோ ரொனால்டோ பந்தை அடிக்க முயற்சி செய்தார். அவருடன் வலென்சியா வீரரும் சென்றார். அப்போது வலென்சியா வீரர் கீழே விழுந்தார். உடனே கிறிஸ்ரி யானா ரொனால்டோ அவரை தலையில் தட்டினார். இதனால் நடுவர் அதிரடியாக ரெட் கார்ட் கொடுத்து ரொனால்டோவை வெளியேற்றினார்.

எவ்வளவு மன்றாடியும் நடுவர் தனது முடிவை மாற்றவில்லை. இதனால் ரொனா ல்டோ கண்ணீர் 'வடித்தபடி வெளியேறி னார்.

ரொனால்டோ இல்லாமல் யுவான்டஸ் 10 வீரர்களுடன் விளையாடியது. முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க வில்லை.

2ஆவது பாதி நேரத்தில் 45 மற்றும் 51ஆவது நிமிடங்களில் யுவான்டஸ் அணி க்கு பெனால்டி வாய்ப்புகள் கிடைத்தது. இதை மிராலெம் சரியாக பயன்படுத்தி கோல் அடித்தார்.

இதனால் 2-0 என யுவான்டஸ் முன்னிலை பெற்றது. அதன்பின் 39 நிமிடங்கள் கோல் அடிக்க விடாமல் பார்த்துக் கொண்ட னர். இதனால் கிறிஸ்ரி யானோ ரொனால்டோ இல்லாமலேயே யுவான்டஸ் 2-0 என வெற்றி பெற்றது.

சம்பியன்ஸ் லீக் முதல் லீக்கில் மெஸ்சி ஹட்ரிக் கோல் அடித்து அசத்திய நிலையில், ரொனால்டோ ரெட் கார்ட் பெற்று ஏமாற்றம் அளித்தார்.

# மல்லாகம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் மண்டபம் அமைப்பதற்கு மாணவர்கள் எதிர்ப்பு

## நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)


மல்லாகம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் மண்டபம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மல்லாகம் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மல்லாகம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் புதிதாக மூன்று மாடி கட்டட தொகுதி ஒன்றினை அமைப்பதற்கு தனியார் ஒருவர் விண்ணப்பம் செய்துள்ளார். குறித்த கட்டடத்தில் திருமண மண்டபம், விடுதி என்பன அமையவுள்ளதாக தெரிவித்து அதற்கு பழைய மாணவர்களால் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன.

அதற்கான அனுமதியினை வழங்கலாமென சுகாதாரப் பிரிவினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பாடசாலை நிர்வாகம் போன்றவர்களின் சிபார்சின் அடிப்படையில் பிரதேச சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இம் மண்டபத்தினால் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுமென தெரிவித்து இவ்அனுமதியினை இரத்து செய்தல் வேண்டும் என கோரி பாடசாலை மாணவர்கள் ஒரு மணி நேரம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-9)






# மாணவர்களுக்கு மீட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ்ப்பாணக்கிளை இவ்வாண்டு சாதாரண தர ஆங்கில இலக்கிய பாட பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இம் மீட்டல் வகுப்புக்கள் இன்றும் நாளையும் (22, 23 ஆம் திகதிகளில்) காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் தகவல் தொழில்நுட்ப மண்டபத்தில் நடைபெறும்.

நாடகம், புனைகதை, உரை நடை, கவிதை ஆகிய பாடங்களுக்கான மீட்டல் வகுப்புக்கள் நடைபெறும். ஒரு பாடத்திற்கு 1000 ரூபா வீதம் அறவிடப்படும்.

மூன்று பாடத்திற்காக பதிவுகளை மேற்கொள்ளும் பொழுது மேலதிகமாக ஒரு பாடத்திட்டத்திற்கு 1000 ரூபா பெறுமதியான நுழைவுச்சீட்டினை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நுழைவுச் சீட்டுக்களை பிரிட்டிஷ் கவுன்சிலில் அல்லது மீட்டல் வகுப்பு நடைபெறும் தினம் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியின் தகவல் தொழில்நுட்ப மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம். பங்குபற்ற விரும்புவோர் பிரிட்டிஷ் கவுன்சிலின் யாழ்ப்பாணக் கிளையின் 021 752 1521 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கில் JET EX 2018 - இலங்கையின் மிகப்பெரிய கல்விக் கண்காட்சி மற்றும் வேலை வாய்ப்பு எதிர்வரும் 23,24, 25 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள செல்வமஹால் திருமண மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறும்.

அன்றையதினம் இலவச தேர்ச்சி மட்ட சோதனை மற்றும் ஆலோசனை வகுப்புகளுக்கான பதிவு, நூலக வசதிகள் மற்றும் அதற்கான அங்கத்துவம், இங்கிலாந்து கல்வி மற்றும் பரீட்சை பற்றிய தகவல்கள் விளையாட்டுப்போட்டி மற்றும் பரிசுகள் வழங்கல் ஆகிய சேவைகள் பிரிட்டிஷ் கவுன் சிலால் வழங்கப்படும். (இ-9)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் ஜெயபாலன் சதீஸ்குமார்**

அன்னை மடியில் 16.06.1982

ஆண்டவன் திருவடியில் 22.09.2016

ஆண்டிரண்டு கடந்தாலும்
இருதயமே உன் நினைவில்
எம் இனியவனே குமரா!
நித்தமும் உன் பாசமுகம்
நினைக்கையில்
நீரலையாய் கண்ணீரையா!
எமையிங்கு கலங்கவிட்டு
ஏன்தான் சென்றாயோ
ஆயிரம் ஆண்டு கடந்தாலும்
வற்றாது எங்கள் கண்ணீர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கனகபவன்"
இணுவில் கிழக்கு
இணுவில்.

(5747)

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா,
தங்கை, மைத்துனன்.

# இராசி பலன்

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**மேடம்:** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும், மதிப்பும் மரியாதையும் கூடும்.

**இடபம்:** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், ஆயிலியம்<br>காலை 7.48 மணிக்கு<br>கும்-சந் | | ராகு |
| கேது, செவ், சந் | | | |
| சனி | | குரு, சுக் | சூரி, புத |

22.09.2018
புரட்டாதி 06, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி முழுவதும்
அவிட்டம் முன்னிரவு 8.58 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
புரட்டாதி சனி, சித்தாமிர்தம்
சனிப்பிரதோச விரதம்

வளவன்

**கடகம்:** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வேலைச்சுமை கூடும்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொது வழியில் புகழ்கூடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** உறவினர்களின் வருகையில் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, ரோக பயமுண்டு.

**துலாம்:** வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இனத்தார் பகைமாறி இன்பங்கள் கூடும் நாள், வியாபாரத்தை விரிபுபடுத்தும் எண்ணம் உருவாகும்.



புங்குடுதீவு 12 ஆம் வட்டாரம் இத்தியடிபுலம் நாச்சிமார் தேவஸ்தான சங்காபிஷேக நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறேன்

## அமைச்சர் சிவநேசன் தெரிவிப்பு



(சாவகச்சேரி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி அலுவலகம் தாக்கப்பட்டமைக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என வடக்கு மாகாண அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்துள்ளார்.

கருத்துக்களை கருத்துக்களால்மோதவேண்டுமேதவிர தாக்குதல் நடத்தியமை மிகவும் தவறானதாகும். தங்கள் கருத்துக்களையும், கட்சிரீதியான செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும், தமிழ் மகனுக்கும் உண்டு.

கருத்துக்களை கருத்துக்களால்தான் எதிர்கொள்ள வேண்டும். அதனை விடுத்து கட்சி அலுவலகங்கள் மீதும் ஆதரவாளர்கள் மீதும் வன்முறையினை பிரயோகிப்பது கட்சிகளிடையே தேவையற்ற பகைமை முரண்பாட்டை உருவாக்கும்.

இத்தகைய செயல்கள் அநாகரிகமானதும் மிகவும் கண்டிக்கத்தக்கதுமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் சாவகச்சேரியில் வேகத்தடை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரை அண்டிய பகுதிகளில் ஏற்படுகின்ற விபத்துக்களை தடுக்கும் நோக்கில் சாவகச்சேரி நகர சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டு வேகத்தடை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வேகத்தடையானது வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படுகின்ற சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இருந்து சாவகச்சேரி தபால் நிலையச் சந்தி வரை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸாரின் ஆலோசனையையும் பெற்று குறித்த வேலைத்திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் என நகரசபை தவிசாளர் தெரிவித்துள்ளார். சாவகச்சேரி நகரில் குறிப்பாக ஏ-9 வீதியில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நகரசபையின் இந்த வேகத் தடை வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் சகலருடைய வரவேற்பையும் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# மக்கள் தான் எஜமானர்கள்

## ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவிற்கான கூட்டம் கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணியளவில் நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில், கட்சியின் உப தலைவர் கா. குலசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, நிர்வாகச் செயலாளர் இரா. சங்கையா, தொழிற்சங்க செயலாளர் த. இராசலிங்கம், இளைஞர் அணிச் செயலாளர் ந. மதியழகராசா மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களான ந. கர்சன், இ. புவனேஸ்வரன், பொ. குகதாஸ் மற்றும் ஆதரவாளர்களென ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வீ.ஆனந்தசங்கரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு மக்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் உல்லாசமாக இருக்கின்றார்கள்.

மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டுமென்றால் மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் எதற்காக.? மக்கள் தான் வாக்குப் போட்டு பாராளுமன்ற உறுப்பனர்களின் உல்லாச வாழ்விற்கு வழி சமைத்துக் கொடுத்துள்ளார்கள். மக்கள் தான் எஜமானர்கள்.

ஆனால் அந்த உணர்வு சிறிதுமின்றி இவர்கள், மக்களின் போராட்டத்தை, வெறுமனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். வாக்களிப்பதும் மக்கள், தங்கள் பிரச்சினைகளுக்காக போராடுவதும் மக்கள் என்றால் இவர்கள் எதற்காக?. முள்ளிவாய்க்கால் பகுதியில் எமது மக்களின் படுகொலைகளையே வேடிக்கைப் பார்த்தவர்களுக்கு இது ஒன்றும் பெரிதல்லவே.

இந்த நிலைமையை தொடர்ந்தும் நீடிக்க விடாமல், நாம் அனைவரும் நான் பெரிது நீ பெரிது என்று பாராமல் நாடும் மக்களும் பெரிது என நினைத்து அனைவரும்ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களுக்காக போராட வேண்டும் என்ற எண்ணம் உள்ள மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதில் யாழ்.மாவட்டத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. தலைவராக கா. குலசேகரம், செயலாளராக த.இராசலிங்கம், பொருளாளராக ஆர்.குணேஸ்வரன், உபதலைவராக பொ.குகதாஸ், உப செயலாளராக ந. கர்சன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கியவாறு அமைப்பாளர்களும் நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உள்ளூராட்சி சபைகளில் போனஸ் ஆசனங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், சுழற்சி முறையில் ஆசனங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும், உடன்படாதவர்கள் மீது ஏற்கனவே கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக அவர்களை கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, புதிய உறுப்பினர்களை உள்ளூராட்சி சபைகளுக்கு நியமனம் செய்ய வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. (இ-7)

## சிவில் விடயங்களில் தலையிட முடியாது

# சட்டத்தை மதிப்பதால் பொறுமையாகவுள்ளோம்

## யாழ்.கட்டளைத் தளபதி தர்ஷன விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வன்முறைகளில் ஈடுபடும் குழுக்களை கட்டுப்படுத்த எமக்கு இரு நாட்கள் போதும் என தெரிவித்த பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, சட்டத்தை மதிப்பதால் பொறுமையாக உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

பலாலி இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் ஆவா குழு உள்ளிட்ட பல்வேறு வாள்வெட்டு குழுக்களின் வன்முறைகள் தொடர்பாக அறிந்திருக்கிறோம். ஆனாலும் தற்போது சிவில் விடயங்களில் இராணுவத்திடம் பலம் இல்லை.

இராணுவத்திற்கு அந்த விடயங்களிலே தலையிட தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனை மீறி நாங்கள் மக்களுக்கான செயற்பட்டால் இராணுவத்தின் மீது அபாண்டமான குற்றங்கள் சுமத்தப்படும் அபாயம் உள்ளது.

இந்நிலையில் பொலிஸாரிடமே அந்த அதிகாரங்கள் பூரணமாக உள்ளது. ஆனால் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை வன்முறையாளர்கள் பயன்படுத்துகிறார்கள். இதனால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதை நாங்கள் பார்க்கிறோம்.

இந்நிலையில் இவ்வாறான வாள்வெட்டு குழுக்களை அடக்குவதற்கு எமக்கு அனுமதி தாருங்கள் என ஜனாதிபதியை நாங்கள் கேட்டிருக்கிறோம். அவ்வாறான அனுமதி எமக்கு தரப்பட்டால் 2 நாட்களில் இந்த சிறு வன்முறை குழுக்களை அடக்குவதற்கு இராணுவத்தால் முடியும்.

ஆனால் எமக்கு அந்த அனுமதி இன்னும் தரப்படாத நிலையில் எல்லைக்குள் நிற்கவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# யாழில் 50 இற்கும் அதிகமான வாகனங்கள் திடீர் சோதனை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் பொலிஸாரும்இணைந்து நேற்று முன்தினம் வாகனங்களுக்குப் புகைப் பரிசோதனையும், தரப் பரிசோதனையும் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயில் முன்பாக வீதிகளில் பயணித்த வாகனங்கள் மறிக்கப்பட்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

புகைப் பரிசோதனையில் தோல்வியடைந்த வாகனங்களும் தரம் குறைந்த வாகனங்களும் அவற்றைச் சீர செய்யக் கால அவகாசம்வழங்கப்பட்டது.

சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரம் பொலிஸாரால் பெறப்பட்டு அவர்களுக்கு தண்டப் பத்திரம் வழங்கப்பட்டது.

ஆட்டோக்களும் தரச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் பொருத்தப்பட்டிருந்த அலங்காரப் பொருட்கள், மேலதிக உபகரணங்கள் அனைத்தையும் அகற்றுவதற்கும் உத்தரவிடப்பட்டது.

இரு மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற சோதனையில் சுமார் 50 க்கும் அதிக வாகனங்கள் சோதனையிடப்பட்டன. இ.போ.ச. பேருந்து ஒன்று மட்டும் சோதனையிடப்பட்டது. (இ-9)

## மகாதேவ ஆச்சிரமம் ஜெயந்திநகர், கிளிநொச்சி

ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
சமாதித்திருக்கோவில்

மண்டலாபிஷேகப் பூர்த்தி



மெய்யன்பர்களே!

நிகழும் விளம்பி வருடம் புரட்டாதி 7ம் நாள் (23.09.2018) நாளை ஞாயிற்றுக்கிழமை சித்தயோகமும் சதய நட்சத்திரமும் கூடிய வேளையில் சமாதித்திருக்கோவிலில் எழுந்தருளிய அம்பாளுக்கு 108 சங்காபி ஷேகம் காலை 10 மணியளவில் நடை பெற திருவருள் கைகூடியுள்ளது. இந் நிகழ்வில் யாபேரும் பங்குபற்றி குருவருளையும் திருவருளையும் பெற்றுக்கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க
அன்பே சிவம்

சற்குருநாதன் பணியில்
அறங்காவலர்
நிர்வாக உறுப்பினர்கள்

(C-3880)

## விளையாட்டுப் பாடசாலைக்கான மாணவர் அனுமதிக்கு கோரல்

யாழ். மத்திய கல்லூரி வட மாகாண விளையாட்டுப் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் வட மாகாண பாடசாலையில் உள்ள விளையாட்டுத்துறையில் திறமைமிக்க மாணவர்களுக்கு எமது கல்லூரியில் அனுமதி வழங்கி இலவச விடுதி, வசதி, மேலதிக கற்றல் வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தல் போன்றவற்றை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. இதன் வளர்ச்சியாக எமது கல்லூரியின் இரண்டு மாணவர்கள் அண்மையில் தேசிய ரீதியாக 19 வயதிற்குட்பட்ட துடுப்பாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

எனவே தங்கள் பிரதேச மாணவரது நன்மை கருதி எமது கல்லூரியில் இத்துறைக்கான அனுமதி பெற்று மாணவர்களது எதிர்கால வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றேன்.

அனுமதிக்கான தகைமைகள்

2018 ஆம் ஆண்டு தற்போது தரம் 7இல் கல்வி கற்கின்றவராகவும் 2019ஆம்ஆண்டு தரம் 8 இல் கல்வி கற்கின்றவராகவும் இருத்தல் வேண்டும்.

பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலய மட்டத்தில்விளையாட்டுத் துறையில் 1,2,3 ஆம் இடங்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாக இருத்தல்.

விளையாட்டுத் துறையில் மிக்க ஆர்வம் உடையவராக இருத்தல் அவசியம்.

குறிப்பு :35 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட விருப்பதால் விண்ணப்பங்களின் முன்னுரிமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படும். முடிவுத் திகதி 30.10.2018 என அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ)

## இலவச தையல் பயிற்சி

இடம்: நவமங்கை நிவாஸம்
இராச வீதி, கோப்பாய் வடக்கு
விண்ணப்ப முடிவுத் திகதி
10.10.2018
வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறும்.

(5746)

T.P:- 021 223 0418

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



### மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியை அருள்நிதி **விஜயலக்சுமி** அவர்களால் பயிற்சிகள் நடத்தப்பட இருப்பதால் அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கக் கூடியவர்களும் இந்த விடுமுறைக் காலப்பகுதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திங்கள் முதல் வெள்ளி வரை **பகல் வேளைகளிலும்** பயிற்சிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்:- 22.09.2018 தொடக்கம் 28.09.2018 வரை**
**நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை**
**மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை**

அத்துடன் VISION DIPLOMA கற்கைநெறி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

**அகத்தாய்வு 1 ஆம் நிலை 22.09.2018 சனி மற்றும் 23.09.2018 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.**

**பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியை விஜயலக்சுமி**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

**15.10.2018 அன்று 2 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படவிருக்கிறது என்பதையும் அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல. 81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.இல. 021 222 2772**

(3889)

ஸ்ரீராம ஜெயம்

## இணுவில் திருப்பதி
## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018



**13.09.2018 முதல்**
**22.09.2018 வரை**

22.09.2018 இன்று சனிக்கிழமை
பத்தாம் நாள் திருக்கல்யாணம்
**விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரி**

021 224 2300 ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்

(5604)



## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம் -23.09.2018

*உமையவள்தன் பாலகனார் தேரிலேறி*
*உரும்பைநகர் வீதிவாரார் பாரும்பாரும்*
*பரத்தைப்புலக் கருணாகரன் தேரிலேறி*
*சிக்கலெல்லாம் சீக்கிரமாய் தீரச் செய்து*
*செல்வமொடு செல்வாக்கு மருளுவாய்*
*கலையான்மிளிர் உரும்பைநகர் கருணாகரக் கணபதியே*

*சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில் நாளை 23.09.2018 ஞாயிற்றுக்கிழமை எல்லாம் வல்ல*

### கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா

*வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளது.*

*நாளை காலை 8.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து எம்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார். நாளைய தேர் உற்சவத்தில் ஈழத்துப் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் கலந்து கொண்டு எம் பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள். கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்ய வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.*

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்**

(5745)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/லண்டன்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/493 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BFA/ஆசிரியர்<br>தொ.இ: G/1303 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/அமெரிக்கா PR<br>தொ.இ: B/494 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 60 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: G/1310 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 38 செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/503 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 28 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/1311 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 12 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MSc/அரச தொழில்<br>தொ.இ: B/505 | பிறப்பு: 1979RC<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/1316 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்களை ஆரம்பத்தில் தடுத்து நிறுத்த வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் சட்டத்திற்கு முரணான வகையில் நகரசபையின் அனுமதி பெறப்படாமல் கட்டப்படும் கட்டடங்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு தடுத்து நிறுத்த வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நிதிகேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நகரசபையின் அனுமதி இன்றி கட்டப்படும் கட்டடங்கள் சில இடங்களில் கண்டும் காணாமலும் விடப்படுகிறது. சில இடங்களில் சட்டம் தளர்த்தப்படுகிறது. சில இடங்களில் கண்டிப்பாக இருக்கின்றனர்.

இவ்வாறு செயற்பட்டால் சட்டவிரோத கட்டடங்கள் கட்டுவதை ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது. சட்டத்தை சகல இடங்களிலும் சமமாகப் பிரயோகப்படுத்த வேண்டும்.

அவ்வாறு அனுமதி பெறப்படாத கட்டடங்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து அனுமதியை தற்காலிகமாக நிறுத்த வேண்டும். நகரசபை விடயங்களுக்கு உபயோகிப்பதற்கு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சபை தொடர்பான பிரச்சினைகளுக்கு அவர்களைப் ப்யன்படுத்த முடியும். சட்டவிரோத அனுமதி இன்றி கட்டப்படும் கட்டடம், சந்தைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அவர்களை உபயோகிக்க முடியும் என மேலும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் மீசாலையில் நகரசபையின் அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டட வேலைகளை தடுக்கச் சென்ற நகரசபையின் உபதவிசாளர் மற்றும் நகரசபை உத்தியோகத்தர் மீது அங்கு நின்றவர்கள் தாக்குதல் நடத்த முயன்றமை குறிப்பிடத்தக்கது. (2-30)


# ஆயுத விற்பனையை பிரித்தானியா நிறுத்த வேண்டும்

# விவாதிப்பதற்கான முன் பிரேரணைக்கு ஆதரவாக பாராளுமன்ற உறுப்பினர்கள் இணையத்தில் கையெழுத்து

(லண்டன்)

இலங்கையுடனான ஆயுத விற்பனையை பிரித்தானியா நிறுத்த வேண்டுமென்று பிரித்தானிய பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கான முன்பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து இதுவரை 26 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற இணையத்தளத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

ஐ.நா. ஆயுத வர்த்தக ஒப்பந்தத்தில் மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு ஆயுத விற்பனைகளை செய்வதில்லையென கைச்சாத்திட்ட பிரித்தானியா, தமிழினப்படுகொலை செய்த இலங்கை அரசுக்கு தொடர்ச்சியாக ஆயுதவிற்பனை செய்து வருகின்றது.



அந்தவகையில் இதனை தடுத்து நிறுத்தும் முயற்சியில் தமிழ் தகவல் நடுவத்துடன் இணைந்து பிரித்தானியா வாழ் தமிழ் இளையோர் கடந்த 6 மாத காலமாக தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் பலனாக குறித்த விவகாரம் பிரித்தானிய பாராளுமன்ற விவாதத்திற்குட்படுத்தும் முன் பிரேணைக்கான (EDM) வாக்குகோரும் தளம் ஒன்று பாராளுமன்ற இணையத் தளத்தில் இணைக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த முன்பிரேரணைக்கு ஆதரவு வழங்குமாறு ஆயுத விற்பனைக்கு எதிரான செயற்பாட்டாளர்கள் பிரித்தானியாவின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் தமிழ் தகவல் நடுவத்தின் உறுப்பினர் பொ.கிறிஸ்டிராஜின் ஏற்பாட்டில், ரூட்டிங் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான றொசினா அலீன்-கானை நேற்று சந்தித்த பிரித்தானிய இளைஞர் குழுவினர் மேற் குறித்த விடயம் தொடர்பில் விளக்கமளித்து ஆதரவைக் கோரியிருந்தனர்.

அவர் குறித்த விடயம் அதிர்ச்சியளிப்பதாகவும் ஆயுத விற்பனைக்கு எதிராக தனது ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார். அந்த வகையில் இவருடன் இணைந்து 26 பாராளுமன்ற உறுப்பினர் குறித்த தளத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

கடந்த ஆறு மாதகாலமாக இடம்பெற்றுவரும் இந்த ஆத்ரவு திரட்டும் விழிப்புணர்வு செயற்பாட்டில் பிரித்தானிய புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தமிழ் தகவல் நடுவத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (2-9)

# ஹயஸ் வாகனத்தின் கண்ணாடிகள் உடைப்பு

(கரணவாய்)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனத்தின் பக்கவாட்டு கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து முகமாலை பகுதியில் இடம்பெற்ற மரணச் சடங்கு ஒன்றிற்கு வந்த வர்கள் வாகனத்தில் மீண்டும் பயணிப்பதற்காக தயாரான நிலையில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது இனம் தெரியாத நபர்கள் ஹயஸ் வாகனத்தின் பக்கவாட்டு கண்ணாடிகளை உடைத்து சென்றுள்ளனர்.


இது தொடர்பில் உடனடியாக நேற்று பளைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளனர். (2-60)

# வெங்காய வெடியை உட்கொண்ட யானைக்குட்டி உயிரிழந்தது

(வவுனியா)

வவுனியா ஓமந்தை இள மருதங்குளம் பகுதியிலுள்ள மறாவிலுப்பைக் குளத்தில் யானைக்குட்டி ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

வெங்காய வெடி என்று அழைக்கப்படும் வெடிபொருளை உட்கொண்டு யானை உயிரிழந்ததாக பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. (2)



யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் பிறேமதாஸ், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ.திருக்குமரன் ஆகியோரும் கலந்துகொண்டு கண்காட்சியை நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தனர். (படங்கள்: சுபேசன்)

# திருட்டுப்போன மோ.சைக்கிள் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது

(கரணவாய்)

திருட்டுப்போன மோட்டார் சைக்கிள் ஒன்று கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை சுப்பர் மடம் பகுதி கடற்கரையில் நிறுத்தி வைத்துள்ளார். அந்த இடத்தில் இருந்து குறித்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் குறித்த உறுப்பினர் முறைப்பாடு செய்திருந்தார் .

இந் நிலையில் சுப்பர் மடம் பகுதியிலுள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை குறித்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-9-60)

# விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் அடையாளப்படுத்த வேண்டுமாம்

## புலம்பெயர் சிங்கள மக்கள் அமைப்பின் தலைவர் வலியுறுத்து

விடுதலை புலிகளை பயங்கரவாத அமைப்பு இல்லையென சர்வதேசத்திடம் சிலர் காட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றமையினால், அவ்வியக்கத்தை பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்த வேண்டுமென புலம்பெயர் சிங்கள மக்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வுக்கு சமாந்தரமான அரச சார்பற்ற அமைப்புகளின் அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜெனீவாவில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"விடுதலை புலிகள் அமைப்பை அரசாங்கம் சாராத ஆயுத குழுவாகவே மனித உரிமைகள் ஆணையகம் அடையாளப்படுத்தியுள்ளதே தவிர பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தவில்லை. இதனால் ஒருசிலர் அவர்களை பயங்கரவாத அமைப்பு இல்லையென வலியுறுத்த முயல்கின்றனர்.

மேலும்2006ஆம்ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை தீர்மானத்தின் போது புலிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது.

ஆகையால் இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தினை தெளிவுபடுத்தி விடுதலை புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார். (2-7)

### 30 வருட கால யுத்தத்திற்கு செலவு செய்த பணத்தை

# மக்களுக்கு பயன்படுத்தியிருந்தால் நாம் முன்னேற்றம் அடைந்திருப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

நாட்டில் இடம்பெற்று முடிந்த கடந்த 30 வருட கால யுத்தத்திற்கு செலவிட்ட பணத்தை மக்களுக்காக பயன்படுத்தியிருந்தால் நாம் முன்னேற்றம் அடைந்திருப்போம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், "இந்த பகுதி மக்கள் மிகவும் வறிய மக்கள். அவர்களின் நிலைமை மாற்றியமைக்க வேண்டும்.

நாம் 30 வருடம் யுத்தம் செய்தோம். அதற்காக பெருமளவில் பணத்தையும் செலவு செய்தோம். அந்த பணத்தை யுத்தத்திற்கு செலவழிக்காமல் மக்களுக்காக பயன்படுத்தியிருந்தால் நாம் முன்னேற்றம் அடைந்திருப்போம்.

இந்த நாட்டில் ஏனைய மாகாணங்கள் முன்னேறியுள்ள போதிலும் நாம் பின்னோக்கியே சென்றுள்ளோம். இந்த நிலைமை மாற வேண்டும்.

எமக்கு பெறுமதியான ஒரு ஜனாதிபதி கிடைத்துள்ளார். நாட்டை ஒற்றுமைப்படுத்தும் ஒருவர் கிடைத்துள்ளார்.

நாட்டை பிரிக்காமல், ஒரே நாட்டிற்குள், சகல மக்களையும் இணைத்ததாக, அதிகாரத்தை அந்த மாகாணங்களுக்கு வழங்கி, மக்கள் ஒற்றுமையாக வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என நாம் ஜனாதிபதியிடம் கேட்கிறோம்.

அந் நிலை ஏற்பட வேண்டும். அது நடைபெறும் என நம்புகின்றோம். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நாட்டையும், மக்களையும், எதிர்கால சந்ததியினரையும் முன்னேற்ற வேண்டும்." என கூறினார். (2-7)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கழிவுகளை அகற்றும் போது ஊழியர்கள் பாதிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் கழிவுகளை அகற்றுவது மிகவும் சிரமமாக இருப்பதாக கரைச்சி பிரதேச சபை சுட்டிக் காட்டியுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் கரைச்சி பிரதேச சபையின் கழிவகற்றும் குப்பைத்தொட்டியில் நோயாளிகளுக்கு மருந்து ஏற்றும் ஊசிகள் சிறிஞ் உடனும் தனியாகவும் போடப்பட்டுள்ளமையால் கழிவகற்றும் ஊழியர்கள் பாதிக்கப்படுவதாக கிளிநொச்சி பிராந் திய சுகாதார சேவைகள் பணிப் பாளருக்கும் நிர்வாக உத்தியோக த்தருக்கும் 2018.09.12, 2018.08.09, ஆகிய திகதிகளில் கரைச்சி பிரதேச சபை தவிசாளரினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வைத்தியசாலையில் கழிவகற்றும் போது நோயாளர்களுக்கு ஏற்றப்பட்ட ஊசி குற்றி 2018.09.11 அன்றும் ஒரு ஊழியர் கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

குறித்த பிரச்சினை வைத்தியசாலை நிர்வாகத்தால் சீர் செயப்படாமையால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை கழிவு அகற்றுதலில் தொடர்ந்தும் இழுபறிகள் நீடித்துள்ளது. இந்நிலைமை நீளுமாயின் கழிவகற்றும் பணி நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நோயாளி ஒருவருக்கு ஏற்றப்பட்ட ஊசி பிறிதொருவருக்கு குற்றினால் அவருடைய உடம்பில் இருக்கும் பாரிய நோய்கள் கூட ஒருவருக்கு தொற்றுவதற்கான சந்தர்ப்பம் இருப்பது வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தெரிந்தும் இதனை சீர்செய்யாதிருப்பது ஏன் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (2-312)




# பிரதேச செயலாளரை தாக்க முயன்ற கிராம அலுவலர் பிணையில் செல்ல அனுமதி

(மன்னார்)

முசலி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட கிராம அலுவலர் ஒருவரை மன்னார் நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

முசலி பண்டாரவெளி கிராமத்தை சேர்ந்த கிராம அலுவலருக்கு எதிராக பூநொச்சிக்குளம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் அப்பகுதியில் மேற்கொள்ள இருக்கும் வீட்டுத் திட்டம் தொடர்பாக முசலி பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

மக்களின் முறைப்பாட்டிற்கு அமைவாக குறித்த கிராம அலுவலரை பிரதேச செயலாளர் முசலி பிரதேச செயலகத்தில் வைத்து கடந்த 18 ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது குறித்த கிராம அலுவலர் பலத்த சத்தமிட்டு பிரதேச செயலாளரை தாக்குவதற்கு முற்படுகையில் சக பணியாளர்கள் தடுத்த நிறுத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக முசலி பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார் உடனடியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு, சிலாபத்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் சிலாபத்துறை பொலிஸார் குறித்த கிராம அலுவலரை நேற்று முன்தினம் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது கிராம அலுவலர் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

குறித்த கிராம அலுவலருக்கு எதிராக முசலி பிரதேச செயலகத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)

# முன்பள்ளிக்கு இசைக்கருவிகள் வழங்கல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள கோம்பாவில், தளிர் முன்பள்ளிக்கு வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனினால் இன்னியம் இசைக் கருவிகள் வழங்கிவைக்கப் பட்டுள்ளன.

இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து 70 ஆயிரம் ரூபாய் நிதி இதற்கென அவரால் ஒதுக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் தளிர் முன்பள்ளி முதன்மையாசிரியர் இன்னியம் இசைக்கருவிகளை பெற்றும் கொள்ளும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு வலயக் கல்வி பணிமனையில் நடைபெற்றது.

இதன்போது வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் குறித்த இசைக் கருவிகளை முன்பள்ளியின் முதன்மை ஆசிரியர் திருமதி.சுதர்சினியிடம் கையளித்தார். (2)

# கடல் உணவு கொள்வனவு நிலையத்தின் உரிமையாளருக்கு தண்டப்பணம் விதிப்பு

(மன்னார்)

மன்னார்-பேசாலையில் அமைந்துள்ள தனியார் கடல் உணவு கொள்வனவு நிலையத்திடம் இருந்து அபராதத் தொகையாக 25 ஆயிரம் ரூபாவை அறவிட நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளது.

குறித்த நிலையத்திற்கு எதிராக மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், குறித்த பகுதிக்கு சென்று திடீர் சோதனைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகள் சென்று திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். குறித்த நிலையத்தில் கடல் உணவுகளை நிறுவை செய்வதற்காக காணப்பட்ட தராசுகள் பரிசோதிக்கப்பட்டன. இதன் போது தராசுகளின் அளவீடுகளில் பிழை உள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

உடனடியாக குறித்த கடல் உணவு கொள்வனவு நிலையத்திற்கு எதிராக நேற்று முன்தினம் மதியம் அதிகாரிகளினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த கடல் உணவு கொள்ளனவு நிலையத்தின் உரிமையாளருக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதத் தொகையாக செலுத்த உத்தர விட்டுள்ளார். (2)

## மாவட்ட ரீதியில்

# முதியோர் சங்கங்கள் உருவாக்கம்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைகளம் மாவட்ட ரீதியில் முதியோர்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கில் முதியோர் சங்கங்களை உருவாக்கி வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட முதியோர் சங்கம் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நேற்றுக் காலை 9 மணியளவில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக சேவைகள் அலுவலர்களின் பங்கேற்றலுடன் நடைபெற்றது.

மாவட்ட சங்கத்திற்கு தலைவராக ச.ஞானப்பிரகாசம். செயலாளராக க.சிறிதரன், பொருளாளராக சி.சந்திரராசா, உப தலைவராக செ.மயில்வாகனம், உப செயலாளராக அ.சக்திவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 7 பேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

வடமாகாணத்தில் ஏனைய 4 மாவட்டங்களிலும் இதுபோல மாவட்ட மட்ட முதியோர் சங்கங்கள் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் பேரில் உருவாக்கப்பட்டுள்ளது. (2)

# நவராத்திரி விழாவை முன்னிட்டு ஒக்டோபரில் சைவநெறிப் போட்டிகள்

(வவுனியா)

வவுனியா மாவட்ட அற நெறி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நவராத்திரி விழாவை முன்னிட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு சைவநெறிப் போட்டிகளை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியலயத் தில் நடத்தவுள்ளோம்.

எனவே இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அற நெறிப் பாடசாலைகள் செயலாளர் திருமதி. தி.ஆனந் தகணேசுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல் களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# உணவக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உணவக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்திலே பிரதேச சபை செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் உணவு சுகாதாரத் தன்மை, சமையலாளர்களின் சுகாதார முறைமைகள், கழிவகற்றும் முறைமைகள் மற்றும் 2019 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்ற தமிழ் மொழியிலான பெயர் அமுலாக்கல், உணவகங்களுக்கு தரச்சான்றிதழ் வழங்குகின்ற விடயங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது. தவிசாளர் வேழமாலிகிதன், உப தவிசாளர் தவபாலன், உறுப்பினர் ஜெகதீஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரி சுவேந்திரன், பொது சுகாதார பரிசோதகர்கள், உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

## மாவீரர் நாள் நினைவேந்தல்

# ஏற்பாட்டுக் குழுவை உருவாக்குவது தொடர்பான விசேட கூட்டம் நாளை

(முல்லைத்தீவு)

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இந்த வருடத்திற்கான மாவீரர் நாள் நினைவேந்தலை அனுஷ்டிப்பது தொடர்பாகவும் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவை உருவாக்குவது தொடர்பாகவும் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு துயிலுமில்ல வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்து மாவீரர்களுடைய பெற்றோர்கள், உறவினர்கள், தமிழ்த்தேசியப் பற்றாளர்களையும் ஒன்று கூடுமாறு ஏற்பாட்டுகுழுவினர் அறிவித்துள்ளனர். (2-9)

# சாளம்பைக்குளத்தில் பள்ளிவாசல் திறப்பு





வவுனியா மாவட்டத்தின் சாளம்பைக்குளம் பகுதியில் குவைத் நாட்டைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரின் உதவியுடன் பள்ளிவாசல் ஒன்று அமைக்கப்பட்டு வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீனின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

குவைத் நாட்டின் காலித் கமட் அல்காலித் ரகமத்துல்லாவின் நினைவாக தந்தையார் ஹமட் காலித்தின் நிதி உதவியில் குறித்த மஸ்ஜிதுல் அக்சா ஜும்ஆப் பள்ளிவாசல் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக கடந்த 25 வருடங்களுக்கு முன்பாக இடம்பெயர்ந்து தற்போது வவுனியா, புதிய சாளம்பைக்குளம் பகுதியில் குடியேறி வசிக்கும் மக்களினுடைய வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக குறித்த பள்ளிவாசல் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், அப்பள்ளிவாசலுக்கான வீதியும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் குவைத் நாட்டைச் சேர்ந்த ஹமட் காலித், குவைத்தூதரக அதிகாரி, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கின் அபிவிருத்தி பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான், பிரதேச செயலாளர் கா.உதயராசா, பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்துமாறு கோரிக்கை

கிளிநொச்சி - அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்துமாறு அப்பிரதேச பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அக்கராயன் காவல் பிரிவு அக்கராயன் பொலிஸ் நிலையமாக தரமுயர்த்தப்பட்டது. ஆனால் இது வரை பெண்பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிக்கு நியமிக்கப்படவில்லை.

அக்கராயன் பொலிஸ் நிலையம் தரமுயர்த்தப்பட்ட போதிலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விடுதி அமைக்கப்படாததன் காரணமாக, பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணிக்கு வரவில்லை. அவசியமான தேவை ஏற்படின் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இருந்து பெண் பொலிஸார் அக்கராயன் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தருவதாகவும், அக்கராயன் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (2-315)

# இன்று புரட்டாதி சனி 01

ஒருவருக்கு அவரது ஜாதகப் படி ஏழரைச்சனி நடக்கும் காலத்தில் என்ன என்ன இன்னல்கள் ஏற்படுகின்றன என்பதை அனுபவ ரீதியாக ஆயிரக்கணக்கான ஜாதகங்களை ஆராய்ந்தும் அனுபவத்தில் கேட்டும் பார்த்தும் சொல்லியும் வந்ததை உங்களது எச்சரிக்கையாகத் தருகிறேன்.

இவைகளை படித்ததும் தனக்கும் இவ்வாறெல்லாம் நிகழ்ந்து விடுமோ என்ற பயம் அவசியமற்றது. ஏனெனில் எல்லாப்பலன்களும் ஒருவருக்கே நடந்து விடுகிறது என்பது இல்லை. ஒன்றோ அல்லது சிலவோ நடக்கலாம். சாதாரண துன்பங்களோடும் அவை விலகிவிடவும் வாய்ப்புள்ளது.

இறைவனை சரண்புகுந்து அடியாராக வாழ்வோருக்கு அத்தனை இன்னல்கள் வருவதில்லை என்பது பேருண்மையாகும். அறநெறி தவறாது வாழ்வோரை பகவான் நிச்சயம் காப்பாற்றுகின்றார். உலகியல் வாழ்க்கையில் ஒன்றிப்போய் சாதாரணமாக வாழ்பவரே அதிகமான துன்பத்தை ஏழரைச்சனி காலத்தில் அடைகின்றார்.

நான் தினமும் குளித்துவிட்டு நல்லாடை புனைந்தபின் இலச்சினைகள் தரித்து விளக்கேற்றி வழிபடுகிறேன் என்பது தினசரி கடமையே ஆகும். பக்தி என்பது அதனிலும் வேறானது என்பதை பெரியோர் அறிவர். கடவுளுக்கு கமிஷன் தரமுடியாது. நாம் செய்யும் ஆடம்பரமான செலவுகளை சனியின் கணக்கில் எழுத முடியாது.

எனவே எவ்வாறு எச்சரிக்கையோடு இருக்க அவரவரே முடிவு செய்து கொள்ள வேண்டும். இங்கு தரப்பட்டுள்ளவைகள் இனிமேல் யாருக்கும் நேரக்கூடாது என்ற விண்ணப்பத்தை இறைவனிடம் வைக்கின்றேன். கருணையை முதல் குணமாக கொண்டுள்ள இறைவன் தன் மக்களாகிய நம்மை காப்பாற்றட்டும்.

1. ஏழரைச் சனி காலத்தில் வாகன விபத்துகள் அதிகம் நடக்கின்றன. இதற்கு நமது அவசரமும் அதனால் ஏற்படும் பதற்றமுமே காரணமாகும். நிதானமும் நல்ல கணிப்பும் இருந்தால் தப்பிக்கலாம். வீதி விதிகளை மதித்து அலட்சியங்களை விட்டு விட்டால் தப்பித்துக் கொள்ளலாம்.

2.ஏழரைச்சனி காலத்தில் உடல் நலத்துக்கு கேடுகள் வருகின்றன. உண்ணக்கூடாத உணவை உண்பதும் அருந்துவதும் நியமங்கள் இல்லாத உணவும் அளவற்ற அகால நேரத்து உணவும் சரியான தூக்கம் இல்லாமையும் சுய வைத்தியம் செய்வதாலும் மருத்துவத்தை நம்பாமல் மாந்திரீகம் போன்றவற்றை நம்புவதாலுமே ஏற்படுகின்றன.

3.ஏழரைச்சனி காலத்தில் தொழில் நட்டங்கள் ஏற்படுகின்றன. இதற்கு அனுபவக் குறைவும் பேராசையும் சரியான வழிகாட்டி இல்லாமையும் சேரக்கூடாத கூட்டும் திட்டமிட்டு செய்யாமையும் சுயநலமுமே பெரும்பாலும் காரணங்களாக உள்ளன. இக்காலத்தில் புதிய தொழில்களை தொடங்காமல் இருப்பதே நன்று.

4. ஏழரைச் சனி காலத்தில் பணவரவுகளில் தடைகள் ஏற்படுகின்றன. கடன் பெறுவதும் கடன் தருவதும் சரியானவை அல்ல. வங்கியில் பெறுவன, போடுவன ஆபத்தை தருவதில்லை. புதிய நட்பை உண்மை என்றெண்ணி நாமாகவே போய் எதிரியிடம் சிக்கிக் கொள்கிறோம் என்பதே உண்மை.

5.ஏழரைச் சனி காலத்தில் கடன் தொல்லைகள் அதிகமாகின்றன. ஆடம்பரங்கள் அல்லது அநாவசிய செலவுகள், அளவுக்கு மீறிய செலவுகள், எதிர்பாராத செலவுகள், பண்டிகை விழா நிகழ்ச்சிகளுக்காக செய்யும் செலவுகள், மருந்து அணுகுமுறை செலவுகள் ஆகியன காரணங்களாக அமைகின்றன.

6.ஏழரைச்சனி காலத்தில் உறவுகளில் சிக்கல்கள் வருகின்றன. அன்புநெறி நில்லாது பாசத்துக்கு அடிமையாவதும் நம்பகத்தன்மைக்கு அப்பாற்பட்டவர்களை பெரிதும் நம்புவதும் சிறிய பிரச்சினைகளை பெரிதுபடுத்தி தனக்கே வெற்றி என்பதும் விட்டுக்கொடுத்து போகாமல் போட்டி மனப்பான்மையோடு வாதங்கள் செய்வதும் வாக்கில் இனிமையான நல்லவார்த்தைகள் இல்லாமல் போவதுமே காரணங்களாகும்.

7.ஏழரைச்சனி காலத்தில் பற்பல நட்டங்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்குக் காரணம் நமது முன்வினைப் பயன்களே ஆகும். தெரியாமல் செய்தால் அதனை தவறு என்பர். தவறுக்கு மன்னிப்பு உண்டு. தெரிந்தே செய்வதைக் குற்றம் என்பர். குற்றங்களுக்கு சிறிய தண்டனை மட்டுமே தரப்படுகின்றது ஆனால் பாவங்களை சட்டமோ நீதியோ தெய்வங்களோ மன்னிப்பதில்லை.

8.ஏழரைச்சனி காலத்தில் துக்கங்கள் மனதை வாட்டுகின்றன. இதற்கு நாம் உலகியல் விடயங்களில் அதிகமான பற்று வைத்திருப்பதே காரணமாகும். தண்ணீரில் இருந்த போதும் தாமரை இலை அதனில் ஒட்டாது இருப்பது போல வாழாமல் நான், எனது, என்னுடையது என்ற எண்ணங்களோடு நிலையற்ற வாழ்வை நிலையானது என்று நம்பி இருப்பதே சகல துக்கங்களுக்கும் காரணமாக உள்ளது.

9. ஏழரைச்சனி காலத்தில் பகைமைகள் அதிகமாகின்றன. ஏன் தெரியுமா? சிலரை நேசித்தும் சிலரை வெறுத்தும் சிலரை போற்றியும் சிலரை தூற்றியும் சிலரை ஆதரித்தும் சிலரை ஒதுக்கியும் இவ்வாறு விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிப்பதே முக்கிய காரணமாகும். உளவு சொல்லல், கோள் உரைத்தல், சாட்சி கூறல், பிறர் பொறாமை கொள்ளுமாறு நடத்தலும் பகைமை வளரக் காரணங்களாக உள்ளன.

10. ஏழரைச் சனி காலத்தில் ஸ்தானநாசங்கள் நிகழ்கின்றன. இதற்கு முக்கிய காரணமே நமது ஜாதகமே ஆகும். எப்போதுமே தர்மம், நீதி, நியாயம் என்று வாழ்பவர்களுக்கு எதிரிகள் அதிகமுண்டு. நாம் எதேச்சையாக தவறை செய்ய மாட்டோமா என்று காத்திருந்து தங்கள் வலைகளை வீசி எதிரிகள் காத்திருப்பர். கவனமின்மை மற்றும் கெட்டகாலம் வரும் போது நாமாகச் சென்று மாட்டிக் கொள்கிறோம்.

11. ஏழரைச்சனி காலத்தில் நோய்கள் அதிகம் தாக்குகின்றன. இதற்கு ஆசாரம் போன்றவற்றில் நமக்கு உள்ள ஒழுக்க குறைவே பெரிதும் காரணமாகும். கற்புடன் இருப்பது மட்டுமே ஒழுக்கம் என்றாகி விபரது புலனடக்கத்துடன் தூய்மையை கடைப்பிடிக்க வேண்டும். தேவையற்ற ஆசைகளுக்கு மனதில் இடமளிக்காமல் இறைவன் தந்துள்ளதை அளவாக அனுபவித்து கண்ணியத்தை காப்பாற்றினால் நோய்கள் நம்மை அணுகாது.

12.ஏழரைச்சனி காலத்தில் சர்ப்பங்கள் தொல்லை உள்ளது. இதற்கு உங்கள் ஜாதகப்படி இராகு கேதுக்களின் திசையோ புத்தியோ நடக்கிறது என்பதாம். மேலும் சனியுடன் சம்பந்தப்பட்ட சர்ப்பங்கள் ஜாதகத்தில் இணைந்திருக்கும். முன் காலத்தில் நாம் பாம்புகளை அடித்திருந்தால் அது இப்போது நமக்கு தொல்லை தருவதற்காக காத்திருந்து திட்டமிட்டு வருகின்றன.

13. ஏழரைச்சனி காலத்தில் விஷக்கடிகள் ஏற்படுகின்றன. இதற்கு அலர்ஜி என்ற ஒவ்வாமை காரணமாகும். மேலும் இராகு திசை, இராகு புத்தி, கேது திசை, கேது புத்தி ஆகியன நடக்கும் காலத்தில் ஏழரைச் சனி வந்தாலும் விஷக்கடிகள் ஏற்படும். சுத்தமான இடத்தில் சுத்தமாக



இருக்க விஷக்கடிகள் மட்டுப்படும். நாகதோஷ பரிகாரங்களை செய்து ஹோமியோ அல்லது சித்த மருத்துவத்தையும் நாட வேண்டும்.

14.ஏழரைச்சனி காலத்தில் கண்ணுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. ஏனெனில் கண்ணின் தேவதைகளான சூரியனுக்கும் சந்திரனுக்கும் சனி பகை கிரகமாகும். வருடம் ஒருமுறை கண்ணுக்கு மருத்துவ பரிசோதனைகளை முறையாக கடைப்பிடித்து தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். கண்ணுக்குள் விளக்கெண்ணெய் போன்றவற்றைப் போடக் கூடாது. கோப குணத்தை குறைக்க வேண்டும்.

15. ஏழரைச்சனி காலத்தில் டென்சன் எனப்படும் படபடப்பு ஏற்படுகின்றது. இதற்கு முழுமையான காரணம் மனநிலையே ஆகும். சந்திராஷ்டம் காலங்களிலும் சில குறிப்பிட்ட திதி மற்றும் கிழமைகளில் ஏற்படும். மனச்சோர்வு, மனவழுத்தம், மனதின் முடக்கம் போன்றவற்றால் சந்திரனுக்கு பகை கிரகமான சனி ஏற்படுத்தும். மனதுக்கு காரகன் சந்திரன் ஆதலால் அவ்வாறு ஏற்படுகின்றது. அம்பிகையை சரணடையவும்.

16. ஏழரைச்சனி காலத்தில் புத்தி பேதலித்துப் போகிறது. இதற்கு அறியாமை, கோபம், குரோதம், கர்வம், மோகம், ஆசை, அவசரம், ஆத்திரம், லோபம், மதம், மாச்சர் யம் போன்ற துர்குணங்களே காரணமாகவுள்ளன.

நமது வினைகளுக்காக நம்மை தண்டிக்க எண்ணும் சனிபகவான் இவைகளை தூண்டிவிடுவார். யாரொருவர் தகுந்த எச்சரிக்கையோடு நல்ல எண்ணங்களை மட்டும் சிந்திக்கிறார்களோ அவர்களது புத்தி பேதலிக்காது.

17. ஏழரைச்சனி காலத்தில் பொருட்கள் காணாமல் திருட்டுப்போகும். இது திருடன் வெளியிலிருந்து வந்தது அல்ல. தவறான நட்பால் விளையும் பலனாகும். திட்டமிட்ட கூட்டாளி உடன் இருந்து கொண்டே நாம் ஏமாந்த நேரம் பார்த்து பொருட்களை பணமாகவோ சொத் தாகவோ பொருட்களாகவோ அப கரித்து விடுகிறான். தங்களது இய லாமையை அவன் பயன்படுத்திக் கொள்ளுகின்றான். திடீரென முளைக்கின்ற நட்பை நம்பாதீர்கள் என்று கூறுவதை தவிர வேறு வழியில்லை.

18. ஏழரைச்சனி காலத்தில் நீதி மன்றம் மற்றும் வம்பு வழக்குகள் ஏற்படுகின்றன எனில் நீங்கள் இடமளித்து விட்டீர்கள் என்றே கூற வேண்டும். ஒருகை அசைக்க ஓசை வராது. நல்ல உடன்படிக்கைகள் மீறப்படும் போதும் செய்த சத்தியத்தை மீறும் போதும் துரோகிகளோடு சேரும் போதும் துஷ்டரைக் கண்டால் தூர விலகாத போதுமே இவைகள் ஏற்படுகின்றன.

19. ஏழரைச்சனி காலத்தில் சகோதரப்பகை வருகிறதே என்றால் போலியான பாசத்தை நம்பியதே காரணமாகும். தாய் ஒருத்தி என்றாலும் வாயும் வயிறும் வேறல்லவா? சகோதரப்பகைக்கு பொருளாசையே முதல் காரணமாகும். மரியாதை இன்மை இரண்டாம் காரணமாகவும் கூறலாம். ஒற்றுமையின்மை போன்ற மற்ற காரணங் களாலும் சகோதர, சகோதரி பகைகள் வருகின்றன. பாசத்தைக் காட்டிலும் உண்மையான அன்பே பெரிய தாகும். தியாகம் செய்தால் நிம்மதி கிடைக்கும்.

20. ஏழரைச்சனி காலத்தில் மரண பயம் ஏற்படுவது நமக்கு உள்ள பயமே காரணமாகும். தொண்ணூற்று ஒன்பது சதவீதம் யாரும் ஏழரைச்சனியில் மரணமடைவதில்லை என்பதை அனைத்து ஜோதிடர்களும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். எனவே ஏழரைச் சனி காலத்தில் இறந்து போவோமோ என்ற பயம் அவசியமற்றது ஆகும். மனதை தூய்மையாக வைத்துக் கொள்பவர்களும் மரணத்துக்கு அஞ்சாதவர்களும் இதைப்பற்றி கவலைப்படுவதே இல்லை.

21. ஏழரைச்சனி காலத்தில் தந்தை-மகன் உறவு முறிந்து போகிறதே என்று சிலர் கூறுவர். எல்லோருக்கும் அப்படி நடப்பதில்லை. மகன் ஜாதகத்தில் சனியும் சூரியனும் பகை வீட்டில் பரஸ் பரம் இணைந்து காணப்பட்டாலோ ஒன்பதில் சனி நின்றாலோ ஏழரைச்சனி வருகின்ற காலத்தில் தந்தை-மகன் உறவு முறிந்து பாதிப்பு அடையும். ஐப்பசியில் மகனை பெற்றால் தந்தைவிரோதி ஆகிறான்.

22. ஏழரைச்சனி காலத்தில் சொத்தை விற்கும் நிலை ஏற்படுகிறது. இதற்கு ஜாதகத்தில் பூர்வ புண்ணிய பாக்கிய ஸ்தானம் கெட்டிருப்பதே முக்கிய காரணமாகும். செவ்வாய், சனி, சுக்கிரன் என்ற மூன்று கிரகங்களுள் ஜாதகத்தில் பாதிப்பு அடைந்திருக்க இரண்டாம் சுற்று ஏழரைச்சனி நடக்கும் காலத்தில் சொத்தை விற்கும் சூழ்நிலை ஏற்படுகின்றது. அப்போது மனைவி அல்லது வாரிசுகள் பெயரில் சொத்தை தான செட்டில்மெண்டாக மாற்றி விட்டால் தப்பிக்க வாய்ப்புள்ளது.

23. ஏழரைச்சனி காலத்தில் தனது ஊர்விட்டு வேறு ஊருக்கு போகும் நிலை ஏற்படும். இதற்கு ஏழரைச்சனி மட்டுமே காரணமல்ல.

நமது அணுகுமுறை தவறுகளாலும் திட்டமிட்டபடி செயலாற்றாமையாலும் அனுபவங்களின் ஞானக்குறைபாடு போன்ற காரணங்களினாலும் தொழில் மற்றும் சூழ்நிலைகளாலும் ஏற்படுகின்றது. இதனை சரி ஏற்பதே நன்று. காலம் மாறிய பிறகு மீண்டும் தனது சொந்த இடத்துக்கு வந்து விடலாம்.

24. ஏழரைச்சனி காலத்தில் தவறான பழக்க வழக்கங்கள் சிலருக்கு ஏற்படுகின்றன. இது நமது மனம், நட்பு, கொள்கை, சேர்க்கை, உணவு, உடனிருப்போர், வாழ்க்கை அமைப்பு, வசிப்பிடம் போன்ற அநேக காரணங் களால் வருகின்றது. நம்மை தண்டிக்க நேரம் பார்த்து சனிபகவான் காத்திருப்பதால் ஏழரைச்சனி நடக்கும் காலத்தை அவர் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றார். ஞானிகள் ஏழரைச் சனிக்கு அஞ்சுவதில்லை.

25. ஏழரைச்சனி காலத்தில் ஒருவரது ஜாதகத்தால் அவரது குடும்பமே பாதிப்பை அடைகின்றே என்று கேட்டால் சிலருக்கு மட்டுமே இந்தப் பாதிப்பு உள்ளது. இதற்கு முக்கிய காரணங்கள்- உணவுப் பழக்கங்கள், பேராசைகள், சுயநலச் சிந்தனைகள், ஒற்றுமையின்மை, ஆசாரமின்மை, போட்டி மனப்பான்மை போன்றவையே காரணங்கள் ஆகும். மேற்சொன்ன எல்லாவித தீயவைகளையும் நீக்கிக் கொண்டு வாழ்ந்தால் ஏழரைச்சனி என்ன செய்யும் ஒன்றும் செய்யாது.

'ஜோதிஷ வித்யாவாசஸ்பதி'
என்.நாராயணராவ்

# நல்லாட்சியைக் கொண்டு வந்த எமக்கு தண்டனையும் வழக்குகளுமே மிச்சம்



## முன்னாள் அமைச்சர் ரவி ஆதங்கம்

(கொழும்பு)

**முன்னைய ஆட்சியில் மோசடி செய்தவர்களுக்கு எந்தவொரு தண்டனையும் வழங்கவில்லை. ஆனால் இந்த ஆட்சியைக் கொண்டுவர முனைந்த எமக்கு எதிராகவே தண்டனையும் வழக்குகளும் தொடுக்கப்படுவதாக முன்னாள் நிதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் ஆதங்கத்தை வெளியிட்டார்.**

அத்துடன் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

அவர் இலங்கை பொருளாதாரம் பற்றி சிந்திக்க மாட்டார். உலக பொருளாதார நெருக்கடியை பார்த்து நடப்பதாயின் எதற்கு அரசாங்கம், எதற்கு மத்திய வங்கி உள்ளது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விமான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சட்டத்தின் கட்டளைகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள், சேர் பெறுமதி சேர் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை யாற்றுகையில், அனைத்து காரணங்களையும் உலக நிலைமையின் மீது பழி சுமத்துவதனை ஏற்கமுடியாது. ஆகவே ரூபா வின் பெறுமதி அதிகரிக்க வேண்டும் அதனை கொண்டே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாகர்கோவில் மேற்கில் மரமுந்திரிகைச் செய்கைத் திட்டம்







(கரணவாய்)

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் நாகர்கோவில் மேற்கு பகுதியில் மரமுந்திரிகை செய்கையின் ஆரம்ப வைபவமும், மரமுந்திரிகை சங்கம் உருவாக்கலும் அண்மையில் நாகர்கோவில் மேற்குப் பகுதியில் மருதங்கேணி பிரதேச செயலாளர் கே. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

யு.என்.டி.பியின் 5.4 மில்லியன் ரூபாய் நிதியிலும், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 1.4 மில்லியன் ரூபாய் நிதியிலும் இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அப் பகுதியில் உள்ள 30 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டு இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேததாயகன் மரமுந்திரிகை கன்று ஒன்றை நாட்டி இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இரண்டு வருடங்களுக்கு பராமரிப்பதற்கான செலவு சங்கம் ஊடாக வழங்கப்படும்.

இந் நிகழ்வில் யு.என்.டி. பியின் இணைப்பாளர் ஜெனராஜ், சிறப்பு அபிவிருத்தி நிதியத்தின் இணைப்பாளர் குகனேந்திரராஜா, அப்பகுதி கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-60)

## ஞானசார தேரரின் மனுவை ஆராய திகதி அறிவிப்பு

(கொழும்பு)

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தனது தண்டனைக்கு எதிராக செய்துள்ள மேன்முறையீடுமனுவை எதிர்வரும் 28ஆம் திகதி விசாரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நீதியரசர்களான பிரசன்ன ஜெயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் எல்.டி.பீ.தெகிதெனிய ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் அழைக்கப்பட்ட போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கடுமையான உழைப்புடன் 06 வருடங்களில் அனுபவிக்கும் படியாக 19 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் போது, நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அப்போது ஹோமாகம நீதவானாக இருந்த ரங்க திஸாநாயக்கவால் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டு வழக்கு விசாரணை இடம் பெற்றது.

இந்த தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு ஞானசார தேரரால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்து ஞானசார தேரரால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசின் நடவடிக்கையால் மக்கள் பெரிதும் பாதிப்பு

### நாமல் எம்.பி.கவலை



(குருநாகல்)

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் சக்திகளை கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் பொலிஸ் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்தை பயன்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## கொலைச்சதி முயற்சியை விசாரிக்க ஐவர் அடங்கிய குழுவை நியமிக்கவும்

### ஜனாதிபதியிடம் கூட்டு எதிரணி வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான கொலைச் சதி முயற்சி தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கையில் நம்பிக்கையில்லை எனத் தெரிவித்துள்ள கூட்டு எதிர்க்கட்சி, அதனை மேற்கொள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஐவரை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகமகே கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை தொடர்பிலான சந்தேகத்தின் பேரில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு கட்டாய விடுமுறையில் அனுப்பியுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியின் அழுத்தத்தின் பிரகாரமே அவரை கட்டாய விடுமுறையில் அனுப்பியுள்ளனர்.

அத்துடன் அச்சதி முயற்சி தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கையில் எமக்கு நம்பிக்கையில்லை. ஆகவே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்து விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# ராஜீவ் கொலை வழக்கு கைதி சாந்தன் மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம்



(வேலூர்)

ராஜீவ் கொலை வழக்கு கைதி சாந்தன் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு உருக்கமான கடிதம் எழுதி அனுப்பி உள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் கைது செய்யப்பட்ட முருகன், சாந்தன் ஆகியோர் வேலூர் ஆண்கள் சிறையிலும், முருகனின் மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 27 ஆண்டுகளாக சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இவர்கள் உட்பட ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 7 பேர் விடுதலைக்காக போராடி வருகின்றனர்.

இந்த நிலையில் சாந்தன், தன்னை விடுதலை செய்யக்கோரி தனது சட்டத்தரணி ராஜகுரு மூலமாக மத்திய உள்துறை அமைச்சருக்கு 4 பக்கத்திற்கு உருக்கமாக கடிதம் எழுதி அனுப்பியுள்ளார்.

அந்த கடித விபரம் வருமாறு.

நான் சுதேந்திரராஜா என்கிற சாந்தன். உண்மையைச் சொல்லி விடுகிறேன். ராஜீவ்காந்தி கொலை சதி திட்டத்தோடு இந்தியாவிற்குள் நுழையவில்லை. அவுஸ்திரேலியாவுக்கு போவது தான் என் நோக்கம்.

அந்த காலக்கட்டத்தில் இலங்கை தமிழர்கள் பலரும் தலைநகர் கொழும்பு வழியாக பயணிக்காமல் இங்கு வந்து தான் வெளிநாடுகளுக்கு பயணிப்பது வழக்கமாகக் கொண்டிருந்தனர். அப்படித்தான் நானும் வந்தேன். இங்குவரும்போது இலங்கையில் என்மீது குற்ற வழக்குகள் எதுவும் இல்லை என்று அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்ட பிறகு எனக்கு அளிக்கப்பட்ட கடவுச்சீட்டுடன் தான் வந்தேன். இது சி.பி.ஐ. வசமானது. கடவுச்சீட்டை வைத்தே நான் இலங்கை குடிமகன் என நிரூபிக்கப்பட்டது.

சர்வதேச அளவில் பிரபலமான ஒரு தலைவரை கொல்ல வரும் வெளிநாட்டவன் யாராவது தன்னை பற்றிய உண்மையான தகவல்கள் அடங்கிய கடவுச்சீட்டை கொண்டு வருவானா?.

இந்த வழக்கில் இன்னொரு சாந்தனும் குற்றவாளியாக காட்டப்பட்டுள்ளார். தடா நீதிமன்றத்தில் சி.பி.ஐ. சட்டத்தரணி வாதிடும்போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளருக்கு நான் பணம் கொடுத்ததாக சொன்னார். பணம் பெற்ற விடுதலைப்புலி ஆதரவாளர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது என்னை அடையாளம் காட்டவில்லை. இன்னொரு சாந்தனின் போட்டோவை காட்டினார்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பில் பக்கம் 558 இல், இந்த வழக்கில் 19 ஆவது எதிரியாக சேர்க்கப்பட்டு, பிறகு விடுதலை செய்யப்பட்ட ஒருவரிடம், விரைவில் ஒரு முக்கியமான தலைவரை கொல்லப்போவதாக நான் சொன்னதாக பதிவு செய்யப்பட்டிருக்கும். ஆனால், பக்கம் 157 இல் அது அடுத்த சாந்தன் என்றிருக்கும். இப்படி பல குழறுபடிகள் தீர்ப்பில் உள்ளன.

புலனாய்வு அதிகாரிகள் இப்போது சொல்லும் உண்மையை பற்றியோ, 1999 இல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலுள்ள தவறுகள் பற்றியோ நான் இப்போது வெளிக்கொணர விரும்பவில்லை. பழையவற்றை புறம்தள்ளிவிட்டு பயணப்படவே விரும்புகிறேன்.

2011 ஆம் ஆண்டில் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டபோது நோயாளியான என் அப்பா, தூக்கு தண்டனை இரத்து என்ற 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பை அறியும் முன்னரே இறந்துவிட்டார். வயோதிப தாயாருக்காவது மகனுக்கான கடமைகளை செய்ய விரும்புகிறேன். என்னுடைய உறவுகளுடன் என்னைச் சேர்த்து வைக்க மத்திய அரசால் முடியும்.

என்னுடைய சிரமம் மிகுந்த சிறை வாழ்க்கையை சிதறடிக்க உதவுங்கள்.

இவ்வாறு உருக்கமாக அந்தக் கடிதத்தில் சாந்தன் எழுதியுள்ளார். (7)

# ரஃபேல் போர் விமான ஒப்பந்தத்தில் பொய்; பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவி விலகவும்

## காங்.தலைவர் ராகுல்காந்தி கோரிக்கை





(டில்லி)

ரஃபேல் போர் விமான ஊழல் தொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதவி விலக வேண்டும் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

'ரஃபேல்' போர் விமான கொள்முதல் பேரத்தில் ஊழல் நடந்திருப்பதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தொடர்ந்து புகார் கூறி வருகிறார். அதை பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் மறுத்தும் வருகிறார்.

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம், 'ரஃபேல்' போர் விமானத்தை தயாரிக்கிற தகுதித்திறனை பெற்றிருக்கவில்லை என்று நிர்மலா சீதாராமன் கூறியிருந்தார்.

ஆனால் அதை அந்த நிறுவனத்தின் முன்னாள் தலைவரான டி.எஸ்.ராஜூ மறுத்தார். இது குறித்து அவர் குறிப்பிடுகையில்,

"ரஃபேல் போர் விமானத்தை இந்தியாவில் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் தயாரித்திருக்க முடியும். அதற்கான தகுதித் திறன் எங்களுக்கு இருந்தது" என்று கூறினார். இது தொடர்பாக ராகுல் காந்தி டுவிட்டரில்ஒரு பதிவு வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், "ஊழலை பாதுகாக்கும் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ள ரஃபேல் அமைச்சர் (நிர்மலா சீதாராமன்) பொய் சொல்லி இப்போது அகப்பட்டுக்கொண்டு விட்டார். ரஃபேல் போர் விமானத்தை தயாரிக்கிற திறன் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துக்கு கிடையாது என அவர் கூறியதை அந்த நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டி. எஸ். ராஜூ மறுத்துள்ளார். எனவே அவரது நிலை ஏற்கத்தக்கது அல்ல. அவர் பதவி விலக வேண்டும்" என்று கூறியுள்ளார். (7)

# தன்சானியாவில் பட
# 45 பேர் நீரில் மூ



(டுடோமா)


தன்சானியா நாட்டிலுள்ள லேக் விக்டோரியா எனும் ஏரியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 45 பேர் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளான தான்சானியா, கென்யா மற்றும் உகாண்டா நாடுகளுக்கு இடையே லேக் விக்டோரியா எனும் மிகப்பெரிய ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரியானது சுமார் 69 ஆயிரம் கி.மீ. பரப்பளவும் 272 அடி ஆழமும் உடையதாகும்.

இந்நிலையில். தான்சானியா நாட்டிலுள்ள உகாரா தீவிலிருந்து பகோலோரா எனும் மற்றொறு தீவுக்கு இந்த ஏரி வழியாக படகு மூலம் 400 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர். அதிகளவிலான் பயணிகளை ஏற்றிச் சென்றதால் எதிர்பாராதவிதமாக படகு ஏரி
ளானது.

இந்
செய்த 4
மூழ்கி உ
பவம் 

# சைக்கிள் மீது ரயி
# 4 சிறுவர்கள் உடல்



நெதர்லாந்து நாட்டில் தண்டவாளத்தை கடக்க முயன்ற கார்கோ

## எச்.ராஜாவை கைது செய்யாதது ஏன்?-தினகரன் கேள்வி



தமிழகத்தில் அடிமைகள் அரசு நடந்து வருவதால், எச்.ராஜாவை கைது செய்ய முடியவில்லை என, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்ட தினகரன், அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில் மேற்படி தெரிவித்தார்.

பா.ஜ.க.வுக்கு எதிராக கோஷமெழுப்பிய சோபியாவை கைது செய்வதில் காட்டிய ஆர்வத்தை எச்.ராஜாவை கைது செய்வதில் காட்டவில்லை என மேலும் தெரிவித்தார். (7)

# இந்திய பாதுகாப்புப் படை வீரர் பாக்.இராணுவத்தினரால் கொலை

இந்தியா- பாகிஸ்தான் சர்வதேச எல்லைப் பகுதியான ஜம்மு- காஷ்மீரில், பிஎஸ்எப் எனப்படும்எல்லைப் பாதுகாப்பு படை வீரரை துப்பாக்கியால்சுட்டுக்கொன்ற பாகிஸ்தான் படையினர், அவரின் தொண்டையை அறுத்தும், உடலை சிதைத்தும் இந்திய எல்லையில் வீசிச் சென்றுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இந்திய எல்லைக்குள் அத்துமீறிய பாகிஸ்தான் இராணுவத்தினர், குறித்த வீரரை துப்பாக்கியால் சுட்டு கடத்திச் சென்றதாகவும் அதன் பின்னர் கழுத்தை அறுத்துள்ளதாகவும் இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹரியானா மாநிலத்தை சேர்ந்த பிஎஸ்எப் தலைமை அதிகாரி நரேந்திர குமார் என்பவரும்இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குறித்த வீரரை கத்தியால் குத்தியும் உடல் பாகங்களை சிதைத்தும் பாகிஸ்தான் இராணுவம் வெறியாட்டம் போட்டுள்ளதாக, இந்திய இராணுவ அதிகாரியொருவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்தை அடுத்து எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், அண்மையில் ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று இராணுவ வீரர்கள் காணாமல் போயிருந்த நிலையில், அவர்களும் கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் கசிகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது.

இந்தியா - பாகிஸ்தானுக்கிடையில் நீண்டகாலமாக மோதல் நீடித்து வருகின்றது. இந்நிலையில், தற்போது பாகிஸ்தான் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள இம்ரான் கான், சமாதான பேச்சுவார்த்தைக்காக இந்தியாவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கு இந்தியாவும் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், மேற்படி சம்பவங்கள் அதிகரித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (7)

# டகு கவிழ்ந்தது;
# மூழ்கிப்பலி!



படகு ஏரியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் படகில் பயணம் செய்த 45 பேர் பரிதாபமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த மீட்புப்படையினர் அப்பகுதிக்கு விரைந்து 100 இற்கும் மேற்பட்டவர்களை பாதுகாப்பாக மீட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர்களில் 32 பேர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படகில் பயணம் செய்த மேலும் பலரை காணவில்லை என்பதால் அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (7)

# யில் மோதியதில்
# டல் சிதறிப் பலி!



ார்கோ

சைக்கிள் மீது ரயில் மோதிய விபத்தில் 4 சிறுவர்கள் பரிதாபமாக பலியாகினர்.

நெதர்லாந்து நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள ஆஸ் நகரில் கார்கோ சைக்கிளில் சிறுவர்கள் சிலர் சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் அங்குள்ள தண்டவாளத்தை கடக்க் முயன்றனர்.

அப்போது அந்த வழியாக வந்த ரயில் சைக்கிள் மீது வேகமாக மோதியது.

இந்த விபத்தில் சைக்கிளில் சென்ற 4 சிறுவர்கள் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பரிதாபமாக இறந்தனர். மேலும் ஒரு பெண் படுகாயம் அடைந்தார். (7)

# ள்வி



கைது
(7)

டயினர்
பணி
இரா
ிருந்த
யப்பட்
சுட்டிக்
டயில்
ன்றது.
பிரத
கான்,
ந்தியா
தரிவித்
ங்கள்
ற்படுத்
(7)

# வியட்நாம் ஜனாதிபதி ட்ரான் டாய் உடல்நலக்குறைவால் காலமானார்



(ஹனோய்)

வியட்நாம் நாட்டின் ஜனாதிபதி ட்ரான் டாய் குவாங் உடல்நலக்குறைவால்நேற்றுக் காலை மரணமடைந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வியட்நாம் நாட்டின் இராணுவ வைத்தியசாலையில் தீவிர உடல்நலக்குறைபாடு காரணமாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் அந்நாட்டின் ஜனாதிபதி ட்ரான் டாய் குவாங். இவர் தனது உடல்நலக்குறைவு காரணமாக வெளிநாடுகளிலும் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், நேற்று முற்பகல் 10 மணியளவில் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 61 வயதான இவர்2016 ஆம்ஆண்டு ஏப்ரல் 2 முதல் வியட்நாமின் ஜனாதிபதியாக பதவி வகித்து வந்தார்.

வியட்நாமின் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ட்ரான் டாய் குவாங், சட்டப் படிப்பில் பி.எச்.டி. பட்டம் பெற்றவர் ஆவார்.

இவர் கடந்த 2006 முதல் 2011 வரை மக்கள் பாதுகாப்புத்துறையின் துணை அமைச்சராகவும் பின்னர் 2011 முதல் 2016 வரை அதே துறையில் அமைச்சராகவும் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

### ரோஹிஞ்யா இன அழிப்பு விவகாரம்

# இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும்

## பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வலியுறுத்து



(ரக்கைன்)

மியன்மாரில் ரோஹிஞ்யா மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்டவர்களை சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் ஜெரமி ஹண்ட் தெரிவித்துள்ளார்.

மியன்மாரின் ரக்கைன் மாநிலத்திற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விஜயம் செய்த ஹண்ட், அந்நாட்டு அரசாங்கத்தின் தேசிய ஆலோசகரும் நோபல் பரிசு வென்றவருமான ஆங் சான் சூகியைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு பதிலளித்த அவர் மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் இன அழிப்பு இடம்பெற்றுள்ளதென ஐ.நா. கடந்த மாதம் அறிக்கை வெளியிட்டிருந்தது. இது மிகவும் பாரதூரமானதென சுட்டிக்காட்டிய ஹண்ட், மியன்மார் இராணுவம் மிகவும் மோசமான முறையில் செயற்பட்டுள்ளதென கூறியுள்ளார்.

மியன்மார் இராணுவம் சூகியின் கட்டுப்பாட்டில் இல்லை. எனினும், இடம்பெற்ற அட்டூழியங்களுக்கு இராணுவம் பொறுப்புக்கூற வேண்டும். இப்பிரச்சினை உள்நாட்டில் தீர்க்கப்படாவிட்டால் சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லல் உள்ளிட்ட வேறு வழிகள் நாடப்படுமென ஹண்ட்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரோஹிஞ்கிய விவகாரம் தொடர்பில் செய்தி சேகரித்தமை மற்றும் அரச இரகசியங்களை வெளியிட்டதாகக் கூறி மியன்மாரில் சிறை வைக்கப்பட்டுள்ள ரொயிட்டர்ஸ் செய்தியாளர்கள் தொடர்பாக ஆராய இம்மாதம் மீண்டும் மியன்மார் செல்லவுள்ளதாக ஜெரமி ஹண்ட் கூறியுள்ளார்.

மியன்மாரில் பூர்வீகமாக வாழ்ந்துவந்த ரோஹிஞ்கிய மக்கள் மீது இனவாத நோக்குடன் அந்நாட்டு இராணுவம் அட்டூழியங்களை மேற்கொண்டதாக கடந்த மாதம் ஐ.நா. அறிக்கை வெளியிட்டிருந்தது. அம்மக்களை படுகொலை செய்தமை, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை, குடியிருப்புகளுக்கு தீ வைத்தமை போன்றவற்றை சுட்டிக்காட்டிய ஐ.நா. இது திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையென சாடியிருந்தது. இவற்றிற்கு அந்நாட்டின் இராணுவ பிரதானி மற்றும் 5 இராணுவ தளபதிகள் மீது குற்றஞ்சாட்டிய ஐ.நா. அவர்களை சர்வதேச சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியிருந்தது.

ரக்கைன் மாநிலத்தில் இடம்பெற்ற இக்கொடூரங்களை கட்டப்படுத்தும் வல்லமை சூகிக்கு காணப்பட்டும். அதனை மேற்கொள்ளவில்லையென சர்வதேச நாடுகள் குற்றஞ்சாட்டின.

அத்தோடு, அந்நாட்டு இராணுவத்திற்கு எதிராக செயற்பட சூகி பின்வாங்குவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அவரை பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிலிப்பைன்ஸில் மண்சரிவு உயிரிழப்பு 12 ஆக உயர்வு



(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட மண்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

மண்சரிவில் புதையுண்ட வீடுகளுக்கு இடையில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வரும் அப்பகுதி மீட்புப் பணியாளர்கள் தற்போது 12 பேரின் சடலங்களை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 12 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

எனினும், மேலும் 50 பேர் காணாமற்போயுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில், உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்குமென மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். (7)

# இந்தியா உள்ளிட்ட 5 ஆசிய நாடுகளில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரிப்பு

## அமெரிக்கா தகவல்

(நியூயோர்க்)

இந்தியா உள்ளிட்ட 5 ஆசிய நாடுகளில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்புத் துறையின் ஒருங்கிணைப்பாளர் நாதன் சேல்ஸ் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் 2017 ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளில் நடந்த பயங்கரவாத தாக்குதல்கள் குறித்து பட்டியலிடப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் 100 நாடுகளில் பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

அவற்றில் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், பிலிப்பைன்ஸ் ஆகிய 5 ஆசிய நாடுகளில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

அங்கு மட்டும் 59 சதவீதம் அளவு பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

70 சதவீத சாவுகள் ஆப்கானிஸ்தான், ஈராக், நைஜீரியா, சோமாலியா, சிரியா ஆகிய நாடுகளில் நடைபெற்றுள்ளன.

ஐ.எஸ், அல்கொய்தா அவற்றின் கிளை பயங்கரவாத இயக்கங்கள் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளன.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து தகவல் பரிமாற்றங்களை அதிகரித்து பயங்கரவாதிகளை ஒழிக்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (7)

# தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அரசு உடனடித்தீர்வை முன்வைக்க வேண்டும்

## சாந்தி எம்.பி.கோரிக்கை



(கொழும்பு)

காணி விடுவிப்பில் இழுத்தடிப்பு, பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிப்பு உட்பட தமிழ் மக்கள் நெடுநாட்களாகவே எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உடனடியாக தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கோரிக்கை விடுத்தார்.

தம்மை விடுவிக்குமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு நல்லெண்ணத்தின் அடிப்படையில் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச்சட்டம் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவிப்புக்கள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இக் கோரிக்கையை விடுத்தார். (இ-7)

# மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்க முடியுமா?

## அநுரகுமார சபையில் கேள்வி



(கொழும்பு)

எரிபொருள் விலை உயர்வினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நெருக்கடியில் உள்ள மீனவர்களுக்கு மாத்திரமாவது எரிபொருள் நிவாரணங்களை வழங்க முடியுமா? எனவும் அவர் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இதனையடுத்து மீன்பிடிப் படகுகளுக்கான எரிபொருள் நிவாரணம் வழங்குவது குறித்து அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து ஆராய்கின்றேன் என மீன்பிடித் துறை அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, அநுர குமார திஸாநாயக்க எம்.பி.க்கு பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 27/2 இல் மீனவர் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்புகையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார குறித்த கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விலை அதிகரிப்பு நாட்டில் மக்களுக்கு பாரிய பிரச்சினையாகவுள்ளது. அதிலும் மீனவர் சமூகம் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளது. கடந்த மே மாதம் மண்ணெண்ணெய் விலை அதிகரித்தது.

அதனை அடுத்து மீனவர்கள் போராட்டம் நடத்தினர். இதனால் மண்ணெண்ணெய் விலை குறைவடைந்தது.

இதனால் மண்ணெண்ணெய் படகுகளை பயன்படுத்தும் நபர்களுக்கு வாய்ப்பாக அமைந்த போதிலும் பெற்றோல், டீசல் படகுகளை பயன்படுத்தும் அதிகமான மீனவர்கள் இன்றும் பாரிய நெருக்கடியினை சந்தித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியை கொலை செய்யும் சதியின் பின்னணியில் ரணில்

## எஸ்.பி.திஸாநாயக்க தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதியைக் கொலை செய்யும் சதித்திட்டமானது அரசியல் பின்னணியைக் கொண்டதாகும். இதன் பின்னணியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாற்று அணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நீதியான விசாரணை இடம்பெறவேண்டுமானால் பொலிஸ்மா அதிபரை பதவியில் இருந்து நீக்கவேண்டும். அத்துடன் சட்டம் ஒழுங்கு அமைச்சராக மத்தும பண்டார பெயரளவிலே செயற்படுகின்றார்.

ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் பிரதமருக்கு ஏற்பட்டிருந்தால் சம்பவத்துடன் தொடர்புபட்ட அனைவரும் கைதுசெய்யப்பட்ட தன் பின்னரே விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் நாலக சில்வாவை கைதுசெய்வதற்கு வேறு காரணங்கள் இருந்தும் அவரை தற்போதுதான் கட்டாய விடுமுறையில் அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதிக்கு அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் பிரதமரே தற்காலிக ஜனாதிபதியாக செயற்படுவார்.

ஏற்கனவே நாலக சில்வா இந்தியா ஐதராபாத் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதாக தெரிவித்து போலிச் சான்றிதழை சமர்ப்பித்தே



பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு வந்தார். இந்த குற்றத்துக்காக இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை என எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி குறித்து சபையில் விவாதம்

(கொழும்பு)

டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளமை தொடர்பாக நேற்று முன்தினம் ஆளும், எதிர்க் கட்சியினருக்கிடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன்போது கூட்டு எதிரணியும் மக்கள் விடுதலை முன்னணியும் அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தை கடுமையாக சாடியதுடன் முன்னைய ஆட்சியின் கொள்கையினாலும் உலகப் பொருளாதார நிலைமைகளினாலுமே ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டதாக ஆளும் கட்சியினர் சபையின் அவதானத்துக்குக் கொண்டுவந்தனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சட்டத்தின் கட்டளைகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள், சேர் பெறுமதி சேர் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆளும், எதிர்க்கட்சியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## உள்ளத்தில் உறுதி உதட்டில் புன்னகை

பொது வாழ்க்கைக்கு வந்து விட்டவர்களுக்குப் பலவகையான இடர்பாடுகள் உண்டு. பலரும் ஏகப்பட்ட நிகழ்ச்சிக்கு அழைப்பார்கள். திகதி சரிப்பட்டு வராது. நேரமிருக்காது. அதேநேரத்தில் வரமுடியாது என்று முகத்திலடித்தாற்போல் சொல்லி விடவும் முடியாது.

நிச்சயம் இந்த நிகழ்ச்சிக்குப் போகக் கூடாது என்று முடிவெடுத்து விட்ட போது கூட பக்குவமாகப் பதில் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் இந்தப் பாணியில் சொல்லத் தெரியாமல் பல பேரிடம் நான் கெட்ட பெயர் எடுத்துக்கொண்டேன்.

இப்போதெல்லாம் இதில் கொஞ்சம் பயிற்சி வந்து விட்டது. இந்த இரகசியத்தைத்தான் உங்களிடம் இப்போது பகிர்ந்து கொள்கிறேன்.

நம்முடைய இயலாமைகளை முகம் மாறி (விகாரமாக) மறுக்க வேண்டியதில்லை. நம் உள்ளத்து உறுதியின் தீவிரம் தெரிந்து விடாமல் முதலில் இதமாகவே மறுக்கலாம். சிலர் இதமாக மறுக்காமல் அதெல்லாம் என்னிடம் நடக்காது, முடியவே முடியாது நான் ஏன் வர வேண்டும்? நான் ஏன் தர வேண்டும் என்றெல்லாம் கொஞ்சம் சூடாகி விடுவார்கள். இவை அவசியமில்லை.

பரவாயில்லை நான் வரவில்லை. நீங்கள் மட்டும் போய் வாருங்கள். இந்த முறை என்னால் வருவது கடினம். அடுத்த முறை வேண்டுமானால் பார்க்கலாம் என்றெல்லாம் சிரித்த முகத்துடனேயே சொல்லிப் பார்க்கலாம். இங்கிதம் தெரிந்தவர்கள் அதைப் புரிந்து கொண்டு விடுவார்கள். விட்டுவிடுவார்கள்.

ஆனால் சிலருக்கு நம்மை அசைத்துப் பார்க்கும் ஆசை வந்து விடும். நம்மை மிகவும் வற்புறுத்துவார்கள். இவர்களிடம் கொஞ்சம் வெளிப்படையாகப் பேசித்தான் தப்பிக்க முடியும். இந்தப் பெண்ணுக்குத் தலையாட்டு என்பவரிடம் இந்தப் பெண் பிடிக்கவில்லை வேறு பெண் பார்ப்போமே என்று சொல்லலாம். மோட்டார் சைக்கிளைத் தலையில் கட்ட எண்ணுபவரிடம் எனக்கு ஸ்கூட்டராக இருந்தால் பரவாயில்லை எனலாம். ஏனோ மோட்டார் சைக்கிள் பிடிக்கவில்லை என்று சொல்லலாம். இந்த இடத்தில் சுத்தமாப் பிடிக்கலை, கட்டோடு பிடிக்கலை, அடியோடு பிடிக்கலை, வெறுப்பா இருக்குது, சும்மா சும்மா சொன்னதையே சொல்லாதீங்க! ஏன் இப்படி வற்புறுத்துறீங்க? என்றெல்லாம் கடுமையான சொற்களைப் பயன்படுத்தக்கூடாது. இவற்றைப் பயன்படுத்தினால் நமக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசமில்லாமல் போய் விடும். இவற்றையும் மீறி மற்றவர்கள் நம்மை வற்புறுத்தினால் "மனசுக்குள் நான் பிடிவாதமாக இருக்கேன். உங்க மனசு புண்படக் கூடாதேன்னுதான் பக்குவமா மறுத்துக்கிட்டிருக்கேன்" என்று சொன்னால் போதும்! எதிராளி கப்சிப்!

லேனா தமிழ்வாணன்

# அரசியல் அநாதைகளாக ரணில் எதிர்ப்பு அணியினர்

## அப்புஹாமி எம்.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய பின்னர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை சாட்டும் 16 உறுப்பினர்களும் கடந்த அரசாங்கத்தில் பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்கள் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி.

அரசாங்கத்தின் ஒரு சரிவினை கண்டதன் பின்னர் தமது அரசியல் இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்காக அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 16 உறுப்பினர்கள் இன்று பொதுஜன பெரமுனவுடன் இணையாமல் அரசியல் அநாதைகளாக செயற்படுகின்றனர் என தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




# தாஜுடீன் வழக்கை முடிவுக்கு கொண்டுவர சி.ஐ.டியினருக்கு நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

ரக்பி வீரர் வசீம் தாஜுடீனின் கொலை தொடர்பான விசாரணைகள் தாமதமாவதையிட்டு அதிருப்தி தெரிவித்த கொழும்பு மேலதிக நீதவான் இசுறு நெத்திகுமார இந்த வழக்கின் விசாரணைகளை முடிவுக்கு கொண்டு வருமாறு சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டார்.

2012 இல் ஆரம்பமான இந்த விசாரணையின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றம் திருப்தியடைய முடியாமல் இருப்பதாக அவர் தெரிவித்தார்.



நடந்துவரும் விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்களை விளக்கி நீதிமன்றத்தில் அறிக்கையொன்றை தாக்கல் செய்யுமாறு மேலதிக நீதவான் மேலும் உத்தரவிட்டார்.

இந்நிலையில் இவ் வழக்கின் சந்தேக நபர்களான முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க முன்னாள் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா மற்றும் முன்னாள் கொழும்பு பிரதான வைத்திய அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகர ஆகியோரைப் பற்றிய சாட்சியங்களின் தொகுப்பொன்றை தாக்கல் செய்யுமாறு சி.ஐ.டி பிரிவினர் கேட்கப்பட்டிருந்தனர்.

இதற்கு பதிலளித்த பிரதி சொலிஸ்டர் ஜெனரல் திலான் ரட்நாயக்க குறித்த கொலைச் சம்பவம் 2012 இல் இடம் பெற்ற போதிலும் 2015 ஆம் ஆண்டிலேயே சி.ஐ.டியினர் இந்த கொலை சம்பவம் பற்றி அதிகாரபூர்வ விசாரணைகளை ஆரம்பித்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தார். (இ-7)

# தொழில்நுட்ப உதவியாளர்; ஆட்சேர்ப்புச் செய்வதற்கு திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் (விவசாய விரிவாக்கம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்து தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே எதிர்வரும் 03 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ 0212219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகி ன்றீர்கள்.

எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (இ

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# வெடிகுண்டைத் தயாரித்தவர் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில்

## என் மகனோ சிறையில்-பேரறிவாளன் தாய் அற்புதம்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டை தயாரித்தவர் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளார் என்றும். அவர் இதுவரை விசாரிக்கப்படவில்லை என்றும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உண்மையான குற்றவாளிகள் கண்டறியப்படாமலேயே வழக்கு தொடர்வதாக பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் சுட்டிக்காட்டினார்.

"எனது மகன் பயன்படுத்திய மின்கலம், வெடிகுண்டு தயாரிக்க பயன்படுத்தப்பட்டதாக இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

வெடிகுண்டை தயாரித்தவர் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இதுவரை அவரை விசாரிக்கவே அனுமதி கிடைக்கவில்லை என்கிறார்கள்.

இந்த நிலையில் எனது மகன் 28 வருடங்களாக சிறைவாசத்தை அனுபவித்து விட்டான். எனவே முதலில் பாதிக்கப்பட்டது நானும் எனது மகனும்தான். ஆகவே என் மகன் உள்ளிட்ட ஏழுபேரையும் விடுவிக்க ஆளுநர் அனுமதி வழங்க வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போதைக்கு எதிராக குரல் கொடுத்த தமிழ் இளைஞன் கடத்திக் கொலை




(இரத்தினபுரி)

இரத்தினபுரி - கொலுவாவில - பாம்கார்டன் தோட்ட பிரதேசத்தில் போதைக்கு எதிராக குரல் கொடுத்த தமிழ் இளைஞன் கடத்திக் கொலை செய்யப்பட்டதை எதிர்த்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி சந்தேகநபரை உடனடியாக கைது செய்யுமாறு கோரி இரத்தினபுரி மாநகர சபை உறுப்பினர் பதிராஜா தலைமையில் பாம்கார்டன் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் பெருந்திரளான தோட்ட மக்கள் கலந்து கொண்டனர். மேற்படி ஆர்ப்பாட்டம் சில மணி நேரம் இடம்பெற்றது. சந்தேகநபரை உடனடியாக கைதுசெய்வதாக. பொலிஸார் உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

மேற்படி பிரதேசத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)



பொலிகண்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் மாணவர் பாராளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் பாடசாலை மண்டபத்தில் அதிபர் வீ. இந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ. சா.அரியகுமார், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய மும்மொழி கொள்கை இணைப்பாளர் சாள்ஸ்லாரசா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# நாலக சில்வா புலிகளுடன் தொடர்புடையவர் தேசிய சுதந்திர முன்னணி அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா ஒரு புறம் பாதாளக் குழுவினரது தொடர்பும் மறுபுறம் பொலிஸ் ஆணைக்குழுவின் பலமும் கொண்டவர். ஆகவே இவரது விடயத்தில் அரசாங்கம் அசமந்தமாக செயற்படாமல் இவரை கைதுசெய்து சுயாதீனமாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய திட்டம் தீட்டியுள்ளதாக பொலிஸ் பிரிவின் முக்கிய தரப்பினரே தகுந்த ஆதாரத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

இது ஆட்சி கவிழ்ப்பு மற்றும் புது ஆட்சி தோன்றுவதைத் தடுக்கும் சூழ்ச்சியாகவே காணப்படுகின்றது எனவும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)





கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை குஞ்சர் கடையடி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற முதியோர்களுக்கு கரவெட்டி உதவி பிரதேச செயலாளர் எஸ்.றஜீவ், சமூக சேவை உத்தியோகத்தர் வரதபாஸ்கரன் ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

(படங்கள்:-மகாலிங்கம்)

# சூழலை மீட்டெடுப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபையுடன் ஹோர் நிறுவனம் இணைவு

(சாவகச்சேரி)

சூழலை மீட்டெடுப்பதனை நோக்கிய உள்ளூராட்சி மன்றங்களும் அதன் வலைப் பின்னல்களும் என்ற செயற்றிட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்து ஹோர் நிறுவனம் செயலாற்றவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல் மேம்பாடு ஆகியவற்றுக்கு குறித்த நிறுவனம் ஒரு வருட காலத்திற்கு தன்னுடைய பங்களிப்பை மேற்கொண்டு கழிவு முகாமைத்துவத்தினை மேம்படுத்தி சூழலின் தரத்தை உயர்த்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நகர சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் தம்முடன் சேர்ந்து பிரதேச மக்களுக்கு சூழல் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்ட 6 அங்கத்தவர்களையும் இணைத்துக்கொண்டுள்ளது.

குறித்த அங்கத்தவர்களில் மூவர் சாவகச்சேரி நகரசபையின் பெண் உறுப்பினர்கள் ஆவர். அவர்கள் தாமும் குறித்த நிறுவனத்துடன் இணைந்து சூழலைப் பாதுகாக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். (இ-30)

# கம்மன்பில வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிற்கு வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கு விசாரிக்கப்பட்ட போது உதய கம்மன்பில சார்பான சட்டத்தரணி விடுத்த கோரிக்கைக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 6 விதி எண் 5

சுக்கிரன் புதன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பார்க்க சுறுசுறுப்பாகக் காட்சியளிப்பார்கள். எக்காரியத்தையும் உடனே செய்து முடிக்க வேண்டுமென்று நினைப்பார்கள். எதிலும் துரிதமாகச் செயற்படுவார்கள். ஜன ஆதரவு பெற்ற சக்திமான்கள். எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் சாணக்கியர்கள். எளியவர்களுக்கு உதவும் நல்ல குணமிருக்கும். பிறரை நம்பி எளிதில் ஏமாந்து விடமாட்டார்கள்.

படிப்படியாக அந்தஸ்து உயரும். சம உயரத்துடன் சதைப்பற்றுடன் காணப்படுவார்கள். அழகான கம்பீரமான தோற்றமும், அனைவருடனும் இனிமையாகப் பழகும் குணமும் உடையவர்கள். சில நேரத்தில் முரட்டுக் குணமிருக்கும். சில நேரத்தில் குழந்தைகள் போல நடந்து கொள்வார்கள். தனது தகுதிக்கு மீறிய வண்ணம் நட்புகள் கிடைக்கும். நிறைய நண்பர்கள் இருப்பார்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்டவர்கள். இவர்களை மற்றவர்கள் ஏமாற்ற நினைத்தால் சந்தர்ப்பம் பார்த்து பழிவாங்கி விடுவார்கள். இதனால் இவர்கள் மற்றவர்கள் அஞ்சும்படி நடந்து கொள்வார்கள். மற்றவர்கள் இவர்கள் வலையில் எளிதில் மாட்டிக் கொள்வார்கள். பணம் பல வழிகளில் சேரும்.

சினிமா, நாட்டியம், சங்கீதம், கணிதம், சமூக சேவை போன்ற துறைகளில் சிறந்து விளங்குவார்கள். சொற்களைச் செயலாக்கிக் காட்டுவார்கள். வரலாற்றில் இடம் பிடிப்பார்கள். பல அற்புதங்கள் நிகழ்த்துவார்கள். உடலில் ஆன்மீக சக்தி துளிர்விடும். வசீகரமான தொழில் செய்து பணம் சேர்ப்பார்கள். கல்லூரிப் பேராசிரியர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பேச்சாளர்கள், புத்தகப்பிரசுரம், பத்திரிகை, தூதுக் குழுவினர்கள், புதுக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தும் ஆராய்ச்சியாளர்கள், விளையாட்டு வீரர்கள், அறிஞர்கள் போன்றவர்கள் இந்த எண்ணில் காணப்படுகின்றனர். சூட்சும அறிவு பிறவியிலேயே இருக்கும். மின்னல் வேகத்தில் செயற்படுவார்கள். பல நல்ல குணத்தைப் பெற்று வாழ்க்கையில் முன்னேறுவார்கள். அழகின் மீது மனதைப் பறிகொடுப்பார் கள். திறமைசாலிகள். குழந்தைகள் போல நடந்து கொள்வார்கள். குதூகலமாக இருக்கக்கூடியவர்கள்.

புதுமையை விரும்பக்கூடியவர்கள். லீலா விநோதங்கள் இருக்கும். எளிமையும், கடமையுணர்வும் இருக்கும். கடவுள் பக்தி அதிகமுடையவர்கள். சட்டம், அரசியல், சாஸ்திரம் அறிந்தவர்கள். தர்மவான்கள். தன்னிச்சையாகச் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். அதிகமாக ஊர்சுற்றும் குணமுடையவர்கள். ஒரு வித சக்திக்குக் கட்டுப்பட்டு நடக்கூடியவர்கள். தானாக பல வாய்ப்புகள் தேடிவரும்.




சமூக சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்கள். கணவன்- மனைவிக்கிடையே பாசப்பிணைப்பு இருக்கும். இருதலைக் கொள்ளி எறும்பு போன்றவர்கள். நேசம், பாசம் இவற்றுக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்கள்.

ருசியான உணவுகளை உண்பார்கள். ரியல் எஸ்டேட், பியூட்டிபார்லர், நகை, மருந்துக் கடை, மயக்கும் மங்கையர்கள், சினிமா தயாரிப்புகள், லோட்டறி, ரேஸ், மாளிகை கட்டுதல் போன்றதொழில்களால் இலாபம் அடைவார்கள். இருபாலினத்தவராலும் பல நன்மைகள் கிடைக்கும். இலட்சிய எண்ணமுடையவர்கள். கேட்கும் கேள்விகளுக்கு மின்னல் வேகத்தில் பதிலளிப்பார்கள். எளிதில் சோர்வடைந்து விடுவார்கள். அறிவினால் சம்பாதிக்கும் துறைகளில் பெரிதும் விரும்பி நுழைவார்கள். மனம் எப்போதும் ஆராய்ச்சியிலேயே மூழ்கியிருக்கும். உலக சுகங்கள் அனைத்தையும் அனுபவிக்கும் ஆர்வமுடையவர்கள். பிறருக்கு ஆலோசனைகள் கூறுவார்கள். எதையும் எளிதில் கிரகித்துக் கொள்வார்கள்.

நண்பர்கள் பலபேர் இவர்களுக்கு உதவத் தயாராக இருப்பார்கள். பேச்சில் இளமை கலந்திருப்பதால் எவரையும் எளிதில் கவர்ந்து ஏமாற்றி விடுவார்கள். புகழ்ச்சிக்கு மயங்கும் இவர்களைப் பயன்படுத்தி யாரும் காரியம் ஆற்றிக் கொள்ளலாம். முறையற்ற வழிகளில் காமசுகத்தைத் தேடி அலைவார்கள். வீணான பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வார்கள். பலருக்கு உதவும் நல்ல குணத்தால் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தில் வாழக்கூடியவர்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**
1,10,19,28,6,15,24,5,14,23,9,18,27

**துரதிர்ஷ்ட திகதிகள்**
8,17,26,3,12,21,30

**அதிர்ஷ்ட நிறங்கள்**
வெளிர் நீலம், மஞ்சள், பொன்நிறம்,சாம்பல் நிறம், சிமெண்ட் நிறம், பச்சை

**துரதிர்ஷ்ட நிறங்கள்**
கறுப்பு, சிவப்பு, இருண்ட நிறங்கள், ஒரேஞ்சு, ரோஸ்

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**
வைரம், சிர்க்கான், மரகதம், பெரில், அக்கோமரின், டர்க்குவாஸ், ஜேட்


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

50



“தமிழ்நாட்டு அரசியலில் இலங்கை மன்னர் கொண்டிருந்த ஈடுபாட்டின் முக்கியத்துவம் என்ன வெனில், தமிழ்நாட்டில் ஒரு வல்லரசு எழுச்சி பெறும் போது அவ்வல்லரசு தன் ஆதிக்கத்தை இலங்கையிலும் பரப்புவதைப் பார்க்க முடிகிறது. இத் தென்னிந்தியப் பின்னணியில் யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றி அறிவது அவசியமாகிறது”

## யாழ்ப்பாண இராச்சியமும் வன்னிச் சிற்றரசுகளும் (கி.பி. 1200-கி.பி. 1500)

ஆகவே, ஆரியச் சக்கரவர்த்திகளும், சாவக மன்னனும் ஆட்சி புரிவதற்கு முன்பாகவே கலிங்க மாகன் ஆட்சி தொடங்கியிருக்க வேண்டும். இதுவரையில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் படி மாகனின் படையெடுப்புக் குப் பின்பாக கலிங்கர்களுடைய படையெடுப்பு எதுவும் இலங்கையில் ஏற்படவில்லை என்பது நிரூபணமாகிறது.

ஆகவே யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்ப வரலாற்றில் ஏற்பட்ட கலிங்கத் தொடர்புகள் மாகனின் படையெடுப்பின் விளைவாகவே ஏற்பட்டவை என்றே கூற வேண்டும். ஆகவே 1236க்கும் 1262க்கும் இடையில் யாழ்ப்பாண இராச்சியத்தை கலிங்க மாகனும் அவர்களுடைய சகாக்களுமே ஆண்டிருக்கின்றார்கள். கோணேஸ்வரர் கோவிலைத் திருத்தி அமைத்தவன் என்று சொல்லப்படுவனாகிய குளக்கோட்டன் என்பவன் கலிங்க மாகனின் சகாக்களில் ஒருவனாகிய, சோழங்கன் என்று திருகோணமலையிலுள்ள சமஸ்கிருத சாசனத்திலும், தமிழர் வரலாற்று ஏடுகளிலும் காணப்படும் குறிப்புகள் மூலமும் கலிங்க வம்சத்தவரே கி.பி. பதின் மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் யாழ்ப்பாண இராச்சியத்தில் இருந்து ஆட்சி செய்தவர்கள் என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பு யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த யாழ்ப்பாண அரசு, ஒரு சுதந்திர அரசாக இல்லாமல், அக்கால கட்டங்களில் ஆட்சியிலிருந்த அநுராதபுர இராச்சியம், சோழராட்சி, பொலநறுவை இராச்சியம் போன்றவற்றின் ஆதிக்கத்துக்குட்பட்டுப் பல தடவைகள் இருந்திருக்கின்றது.

ஆனால் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று, ஒரு இராச்சியமாக வளர்ச்சி பெற்ற யாழ்ப்பாண இராச்சியம் தொடர்ச்சியாக மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் ஒரு சுதந்திர இராச்சியமாக இருந்திருக்கின்றது. அத்தோடு அது, இலங்கையிலுள்ள வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளையும், சில சந்தர்ப்பங்களில் தெற்கிலுள்ள சிங்கள அரசுகளையும் தன் ஆளுகைக்கு உட்படுத்திய ஒரு சுதந்திர இராச்சியமாகவும் இருந்திருக்கின்றது.

எனவே மேற்கூறப்பட்டவாறு, கலிங்க மாகன் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்திற்கு வழிகோலியவன் என்ற கருத்தின் அடிப்படையின் பின்னணியில், மீண்டும் இக்காலத்து தென்னிந்தியப் பின்னணியினை நோக்குவது அவசியமாகின்றது.

தம்பதெனியாவில் பராக்கிரமபாகு ஆட்சி நடத்திய வேளையில், மாகன் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தான். இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசுகளுடன் கொண்டிருந்த உறவுகளும் மேலும் பல அரசியல் சிக்கல்களை உண்டு பண்ணின. பொலநறுவை வீழ்ச்சியடைந்தபோது, தமிழ்நாட்டில் சோழப் பேரரசு தன் வரலாற்றின் இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தது. சோழப்பேரரசுகளுடைய சாமந்த அரசர்களாக, அதாவது பேரரசிற்குத் திறை செலுத்தும் சிற்றரசுகளாக, நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் அதிகாரம் பெற்றிருந்த சாம்புவராயர், காடவராயர், மலையமான் அரசர், தெலுங்குச் சோழர் என்ற பல்வகைப்பட்ட சிற்றரசர்கள் சோழர் ஆதிக்கத்தில் விலகி, சுதந்திரமாக இயங்கத் தொடங்கினர்.

இவ்வாறான நிகழ்வு பேரரசு ஒன்று தளர்ச்சியுறும்போது இடம் பெறுவது வழக்கம். சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கன் 1216 இல் இறக்க, அவனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த மூன்றாம் ராஜராஜ சோழனால் அரசைப் பாதுகாக்க முடியாது போக, சோழ அரசு சீர்குலைந்தது.

இலங்கையில் காணப்பட்ட குழப்பமான அரசியல் நிலை போன்று தமிழ் நாட்டிலும் காணப்பட்டது. வடக்கிலிருந்து கன்னடப் படைகளும் தெலுங்குப் படைகளும் சோழநாட்டத் தாக்கின. போசளருடைய கன்னடப் படைகள் காஞ்சியில் குழப்பம் விளைவித்தன. நெல்லூர்த் தெலுங்குச் சோழரும், காகிதீயரும் சோழநாட்டுக்குத் தொல்லை கொடுத்தனர். ஒரிஸாவைச் சேர்ந்த ஒரியாப் படைகள் கூட சோழநாட்டைத் தாக்கிக் குழப்பம் விளைவித்தன. காடவர் மன்னனாகிய கோப்பெருஞ் சிங்கன் தன் வலுவைப் பெருக்கிப், பாண்டியருடன் சோழரை எதிர்த்தான்.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கையில் ஆட்சி நடத்தியோரும் தமிழ்நாட்டு அரசர்களுடைய போர்களில் பங்குபற்றினர். சோழரை எதிர்த்த காடவாயன் கோப்பெருங்சிங்கன், பாண்டிய மன்னன் ஆகியோருக்குத் துணையாகச் சிங்கள மன்னன் இரண்டாம் பராக்கிரமபாகுவின் படைகள் போராடின. சோழனுக்கு உதவி புரிய அனுப்பப்பட்ட கன்னட போசள மன்னனின் படைகள் சிங்கள மன்னனுடைய படைகளையும், கோப்பெருஞ்சிங்கனின் படைகளையும் தோற்கடித்துச் சோழமன்னனைக் காப்பாற்றின.

தமிழ்நாட்டு அரசியலில் இலங்கை மன்னர் கொண்டிருந்த ஈடுபாட்டின் முக்கியத்துவம் என்னவெனில், தமிழ்நாட்டில் ஒரு வல்லரசு எழுச்சிபெறும் போது அவ்வல்லரசு தன் ஆதிக்கத்தை இலங்கையிலும் பரப்புவதைப் பார்க்கமுடிகிறது. இத் தென்னிந்தியப் பின்னணியில் யாழ்ப்பாண அரசின் தோற்றம்பற்றி அறிவது அவசியமாகிறது.

சோழப்பேரரசு எழுச்சி பெற்றபோது நடந்ததுபோல, பதின் மூன்றாம் நூற்றாண்டில் ஒரு பாண்டியப் பேரரசு மேற்கூறிய போராட்டங்களில் எழுச்சியடைய, இலங்கையிலும் அப் பேரரசின் தாக்கம் ஏற்படுகின்றது. ஆனால் இம்முறை ஏற்பட்ட தாக்கம் இலங்கையில் வடபகுதியில் ஒரு தனியரசு உறுதி பெற உதவிபெற உதவியது. இதுவே யாழ்ப்பாண அரசின் தோற்றத்தின், வளர்ச்சியின் வரலாற்றை விளங்கிக்கொள்ள, தென்னிந்தியப் பின்னணி காட்டும் செய்தியாகும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரும் பலதடவை அநுராதபுரத்தில் ஆட்சி நடத்திய மன்னர் வழிவிழுந்தபோது, தூரப் பிரதேசங்களில் அதிகாரம் செலுத்தியோர் தனி அரசர் போல் நடந்து கொண்டனர்.

ஆனால் உறுதியான தனியரசுகள் தோன்றவில்லை. மீண்டும் வலிமை வாய்ந்த மன்னர் ஆட்சி அநுராதபுரத்தில் நடந்தபோது, பிராந்தியங்களிலும் எதிர்ப்பு இல்லாத நிலை காணப்பட்டது. ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏன் இவ்வாறு நடக்கவில்லை என கேள்வி எழலாம்.

மேலும், இரண்டாம் பராக்கிரமபாகு மாகனைத் தோற்கடித்திருந்தும், வடபகுதியில் அவனுடைய ஆதிக்கம் ஏன் பரவவில்லை என்றும், வடபகுதி அரசு சிங்கள அரசின் தாக்குதலுக்கு இலக்காகாது பதினைந்தாம் நூற்றாண்டு வரை தனி அரசாக எவ்வாறு இயங்க முடிந்தது என்றும் கேள்விகள் கேட்கப்படலாம்.


இவற்றுக்கான விடைகளைக் காண இரண்டாம் பாண்டியப் பேரரசுக்கும் இலங்கையில் தோன்றிய புதிய அரசுகளுக்குமிடையில் ஏற்பட்ட உறவுகள்ள விளங்கிக் கொள்வது அவசியம். மேற்கூறிய தென்னிந்திய அரசியல் போராட்டங்கள் மூலம் எவ்வாறு மீண்டும் ஒரு பேரரசு தமிழ் நாட்டில் எழுச்சிபெற்றது என்பதனை விரிவாக இங்கு கூறவேண்டிய அவசியமில்லை.

சுருங்கக்கூறின் கன்னட போசள மன்னருடைய உதவியைப் பெற்றதினால் சோழ அரசின் வீழ்ச்சி சிறிது காலத்துக்குத் தாமதமாகியது. போசள மன்னன் இரண்டாம் நரசிம்மன், சோழருக்கு எதிர்ப்புக் கொடுத்த பாண்டியரையும், காடவராயன் கோப்பெருஞ்சிங்கன் மற்றும் சிங்கள மன்னன் பராக்கிரமபாகு ஆகியோரையும் தோற்கடித்து, சோழ மன்னன் மூன்றாம் ராஜராஜனின் ஆட்சி பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை (1256) நீடிக்க உதவினான்.

(தொடரும்)

# விளையாட்டுக்கழக அரங்கிற்கு அடிக்கல் நாட்டல்





(கரணவாய்)

கரணவாய்கிழக்கு இளைஞர் விளையாட்டுக்கழக அரங்கு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

இளைஞர் விளையாட்டுக்கழக தலைவர் தலைமையில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் த.ஐங்கரனின் சொந்த நிதியில் மூன்று இலட்சம் ரூபாயும் த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர்எம்.ஏ. சுமந்திரனின் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நிதி ஒதுக்கீட்டில் இருந்தும் இவ் அரங்கு அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. (இ-60)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக்கல்லூரி இறுதிப் பரீட்சை மற்றும் தேசிய தொழில் தகைமை மட்டம் 5இற்கான பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே மீள் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் விண்ணப்பப் படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 05.10.2018 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொறியியல் பாடநெறிகளில் 2015 ஆம் ஆண்டிற்கு முன் தோற்றி சித்தியடையாத சகல மாணவர்களும் இறுதிப்பரீட்சைக்கு விண்ணப்பித்து அப்பயிற்சி நெறியில் சித்தியடைந்து கொள்வதற்காக ஒரு விசேட சந்தர்ப்பத்தை எமது திணைக்களம் வழங்கியுள்ளது.

ஆகவே NCT பயிற்சி நெறியில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்பு தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதிய மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தை தவறாது பயன்படுத்திக் கொள்ளவும் என யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார்.(இ

# பொலிஸ்மா அதிபர் பூஜிதவுக்கு எதிராக குற்றச்சாட்டு இருப்பின் விசாரிக்க வேண்டும்

## அமைச்சர் பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜிதவை அந்தப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமாயின் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட வேண்டும் என்று பிரதேச அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கிரிபத்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களி



டம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் விசேடமான நபர் என்றும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டு இருப்பின் அது தொடர்பில் உடனடியாக விசாரிக்கப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார். ஒருபோதும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவுடன் ஒருவரை பதவியில் இருந்து நீக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மாத்திரம் போதுமானதல்ல என்றும் அது நிரூபிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு இளைஞர்கள் கைது

(இரத்தினபுரி)

இரத்தினபுரி-பாமன்கார்டன் பகுதியில் போதைப்பொருளுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வந்த தனபால் விஜேரத்னம், மர்மமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தே கநபர்கள் வசமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டொன்று கைப்பற்றப்பட்டுள்ளதுடன். சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாக கூறப்படும் ஆட்டோ ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

பாமன்கார்டன் பகுதியிலுள்ள ஒரே முகவரியில் வசிக்கும் 24 மற்றும் 23 வயதான இருவரே இச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்திற்கு எதிராக செயற்பட்டதே, இந்த கொலைக்கான காரணமாக அமைந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1511

### ரமேஷ்

நாம பணக்காரங்க ஆகிட்டோம்னு நம்புறது ஒரு மனநோய்



இதன் முதல் அறிகுறி லோன்ல கார் வாங்குவது

### தீனேஷ்

பெரியவங்களுக்கு சின்னவங்க மரியாதை கொடுக்கனும், எதிர்த்துப் பேசக்கூடாது



அம்மா உங்களைவிட பெரியவங்களாப்பா...

### சுரேஷ்

பல நாள் டவுட்



காருக்குப் பின்னால் எதுக்கு இப்படி இருக்குன்னு இப்பத்தான் புரியுது...

### கணேஸ்

நாங்க ஏழு பேர் ஒரே குடையை பிடிச்சுட்டு நடந்து போனோம்.. யாருமே நனையல, அதெப்படி



அப்பதான் மழையே பெய்யலையே

### சபேஷ்

தீப்பெட்டியின் கடைசித் தீக்குச்சியைப் பற்ற வைப்பதில் உள்ள கவனம்



முதல் தீக்குச்சியிலே வந்துவிட்டால் வாழ்க்கையை எளிதில் ஜெயித்துவிடலாம்

### கமலேஸ்

சாப்பிட்ட பிறகு ருசியைச் சொல்பவன் விஞ்ஞானி



மோப்பம் பிடித்தே ருசியை சொல்பவன் வில்லேஜ் விஞ்ஞானி

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மௌனக் கொள்கையை அரசு கையாண்டால் மக்கள் வீதிக்கு இறங்குவதை தடுக்க முடியாது

## சுனில் ஹந்துன்நெத்தி இடித்துரைப்பு



(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு, கடன் சுமைகள் அதிகரிக்கின்றன பொருளாதார நெருக்கடி தாக்கத்தை செலுத்துகின்ற போதிலும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அரச, தனியார் துறையின் சம்பளம் உயர்வடையவில்லை. பொருளாதாரத்தை கையாள தெரியாது மௌனக் கொள்கையை அரசாங்கம் கையாண்டால் மக்கள் வீதிக்கு இறங்குவதை தடுக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் நிதி அமைச்சின் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டு சட்டம் மற்றும் மதுவரி கட்டளைச் சட்டத்தின் மீதான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று நாட்டில் வரிச் சுமை அதிகரித்து செல்கின்றது. கடன் தொகை அதிகரித்து செல்கின்றது. வாழ்க்கைச் செலவு அதிகரித்து செல்கின்றது. ஆனால் மக்களின் வாழ்வாதாரம் குறித்து எந்த தீர்மானமும் அரசாங்கத்தினால் எடுக்க முடியாது உள்ளது.

அரச துறையினரதோ அல்லது தனியார் துறையினரதோ சம்பள உயர்வுகள் இல்லாது நடுத்தர மற்றும் சாதாரண மக்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமான நிலையில் சென்றுகொண்டுள்ளது. ரூபாவின் வீழ்ச்சியையும் சர்வதேச பொருளாதார நெருக்கடியையும் தொடர்பு படுத்தி அரசாங்கம் நன்றாக கதை கூறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புறக்கணிக்கப்பட்ட எமது மக்கள் தடைகளைத் தகர்த்தெறிந்தனர்

## அமைச்சர் மனோகணேசன் புகழாரம்



(கொழும்பு)

தோட்டப்பகுதிகளில் புறக்கணிக்கப்பட்ட எமது மக்கள் இன்று தடைகளை உடைத்தெறிந்து தேசிய நீரோட்டத்தில் கலந்துள்ளனர். அதற்கான பாதையினை நாம் தமிழர் முற்போக்கு கூட்டணியாக முன்னெடுத்து வருகின்றோம். இதுவே எமக்குக் கிடைத்த வெற்றியாகும் என அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோட்டப்பகுதிகளில் புறக்கணிக்கப்பட்ட எமது மக்கள் இன்று தடைகளை உடைத்தெறிந்து தேசிய நீரோட்டத்தில் கலந்துள்ளனர்.

அதற்கான பாதையினை நாம் தமிழர் முற்போக்கு கூட்டணியாக முன்னெடுத்து வருகின்றோம்.

இதுவே எமக்குக் கிடைத்த வெற்றியாகும். எமது செயற்பாடு இத்துடன் முடிந்து விடவில்லை.

எமது மக்களுக்கான தனி வீடுகளை அமைக்கின்றோம். காணி வழங்குகின்றோம். புதிய கிராமங்களை உருவாக்குகின்றோம். இதன் மூலமாக மக்கள் மத்தியில் தேசிய உணர்வு உருவாகியுள்ளது.

வடக்கு- கிழக்கை போன்று மலையகமும் ஒரு கிராமமாக மாற்றம் காணுகின்றது.

அதேபோல்- தேசிய அதிகார சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது எமது போராட்டத்தின் மூலமாக பெறப்பட்டதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷ 10 வருடங்கள் ஆட்சி செய்தும் மலையக மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பத்து வருடங்கள் ஆட்சி புரிந்தார். எனினும் மலையக மக்களுக்கு காணி உரித்துரிமையை கூட வழங்கவில்லையென சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அதிகார சபை சட்டமூலம், பிரதேச சபைகள் திருத்தச் சட்டமூலம், இலங்கை ஆளணி முகாமை நிறுவக திருத்த சட்டமூலம் ஆகியவை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பத்து வருடங்கள் ஆட்சி புரிந்தார். எனினும் மலையக மக்களுக்கு காணி உரித்துரிமையை கூட வழங்கவில்லை. பத்து வருடங்கள் ஆட்சி செய்தும் மலையக மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை.

எனினும் நல்லாட்சியில் 7 பேர்ச்சஸ் காணித் துண்டை மலைய மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற யோசனையை அமைச்சரவையில் நானே முன்வைத்தேன். இதன்படி தற்போது காணி பத்திரத்தை உரித்துரிமையுடனே வழங்கி வருகின்றோம்.

தோட்ட மக்களுக்கு 7 பேர்ச்சஸ்காணிவழங்க யோசனை முன்வைத்தது நானேயாகும். தற்போது நாம் அனைத்து தோட்ட மக்களுக்கும் காணி பத்திரத்துடன் உரித்துரிமையையும் வழங்கி வருகின் றோம்.

இதற்கு முன்னர் எந்த தோட்ட மக்களுக்கும் காணி பத்திரத்திற்கு உரித்துரிமை கிடைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பத்து வருடங்கள் ஆட்சி புரிந்தார். எனினும் காணி உரித்துரிமையைகூட வழங்கவில்லை.

பத்து வருடங்கள் ஆட்சி செய்தும் மலையக மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. சந்திரிகா அம்மையாரின் ஆட்சியை இணைத்தால் 20 வருடங்கள் சுதந்திரக் கட்சி ஆட்சி செய்துள்ளது. எனினும் ஒன்றும் நடக்கவில்லை. நாம் செய்து வருகின்றோம்.

ஆகவே மலையக மக்களுக்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு எதிர்க்கட்சிகள் பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றார்.

அத்துடன் இதன்போது மலையக மக்களுக்கு 7 பேர்ச்சஸ் காணி வழங்கும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் திட்டத்தை நான் பாராட்டுகின்றேன் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## கடையிற் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமத் கடையிற் சுவாமிகளின் வருடக்குருபூசை யாழ்.கந்தர்மடம் குமாரசாமி வீதியில் ஸ்ரீசிவகுருநாத குருபீடம், மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மடத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். (இ-7)

## ஜனாதிபதியின் ஆலோசகராக ஷிரால் லக்திலக நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகராக ஷிரால் லக்திலக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். ஷிரால் லக்திலக, ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினராவார். ஷிரால் லக்திலக தற்போது ஜனாதிபதியின் ஒருங்கிணைந்த செயலாளராகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சுதந்திரக் கட்சியின் அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து பேர் அமைப்பாளர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதன் போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டதாக சு.கவின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

அந்த வகையில் சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்ஷன யாப்பா, டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, சந்திம வீரக்கொடி ஆகியோர் இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## உதயசூரியன் கிராமத்தில் மரநடுகை




(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் உதயசூரியன் கிராமத்தில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் அண்மையில் மரநடுகை மேற்கொள்ளப்பட்டது. இவ் வைபவத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் பிரணவராசா,முன்னாள் தலைவர் றெமின்டியஸ், லயன் டாக்டர் அருளானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-30)

## கதை சொல்லும் நேரமிது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தினரின் ஏற்பாட்டில் ஒவ்வொரு புதன்கிழமையும் முன்பள்ளிச் சிறார்களுக்கான "கதை சொல்லும் நேரமிது" என்ற செயலமர்வு இடம்பெற்று வருகின்றது. கடந்த 19ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி சிவன் கோவிலடி பாரதி முன்பள்ளி சிறார்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு திண்ம, திரவ கழிவுகளை எவ்வாறு வேறுபடுத்தி கழிவு முகாமைத்துவம் செய்வது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. சாவகச்சேரி பொது நூலக உத்தியோகத்தரினால் இந்த செயலமர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# சிறுவர் அரங்கம்

## அரண்மனைக் கோமாளி



முன்னொரு காலத்தில் சந்தனபுரி நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் அரசவையில், விதூஷகன் வரதன் என்பவன் வேலை செய்து வந்தான். அவன் எப்போதும் அரசரை வேடிக்கையாகக் கேலி செய்து வந்தான். இதனால் அரசர் அவன் மீது கோபம் கொண்டார். அதனால் அவர் அமைதி குலைந்தது. படுக்கையில் படுத்த அவரால், தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தபடியே இருந்தார்.

கோபம் அடங்காத அவர் பற்களை நறநறவென்று கடித்தார். அருகிலிருந்த அரசி, "தூக்கம் வராமல் ஏன் இப்படித் துன்பப் படுகிறீர்?" என்று கேட்டாள். "அதற்குக் காரணம் விதூஷகன் வரதன் தான்!" என்றார் அரசர்.

"அரண்மனைக் கோமாளியா? அவன் மீதா இப்படிக் கோபம் கொண்டுள்ளீர். அவனை மன்னித்து விடுங்கள். உங்களை மகிழ்ச்சிப்படுத்தத்தான் அவன் அங்கே இருக்கிறான். அதற்காகத்தான் ஊதியம் வாங்குகிறான். நீங்கள் சிரிப்பதற்காக அவன் ஏதோ பேசி இருப்பான்" என்றாள்.

"நீ சொல்வது சரிதான். இருந்தாலும் அவன் வேலையை அவன் செய்வது இல்லை. என்னையே அடிக்கடி கேலி செய்கிறான். அதனால்தான் அவன் மீது கோபம்" என்றான்.

"உங்களைக் கேலி செய்யும் துணிவு அவனுக்கு வந்து விட்டதா? அப்படி என்ன கேலி செய்தான்?"

"அதை உன்னிடம் சொல்ல வேண்டுமா?" என்று கோபத்துடன் கேட்டார்.

"உங்களை அவன் அவமானப்படுத்தி விட்டானா? நீங்கள் அவனை மன்னிக்கக் கூடாது. இந்தக் குற்றத்திற்காக, அவன் சாகத்தான் வேண்டும்" என்றாள் அரசி.

இதைக் கேட்ட அவர் ஆறுதல் அடைந்தார்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். அவன் செத்தால்தான் மற்றவர்களுக்கு அது பாடமாக இருக்கும். யாரும் என்னைக் கேலி செய்யத் துணிய மாட்டினம்" என்றார். அதன் பிறகு அவர் தூங்கத் தொடங்கினார்.

எப்படியோ அவரைத் தேற்றி விட்டோம் என்று நினைத்து அரசியும் தூங்கினாள். பொழுது விடிந்தது. எழுந்த அரசர் விதூஷகன் வரதனை முதலில் அவமானப்படுத்த வேண்டும். பிறகு கொல்ல வேண்டும். "எப்படி அவமானப் படுத்திக் கொல்வது" என்று சிந்தித்தபடி இருந்தார்.

நல்ல திட்டம் ஒன்று அவருக்குத் தோன்றியது. அரசவைக்கு வந்த அவர் அரியணையில் அமர்ந்தார். வழக்கம் போல அங்கு வந்த விதூஷகன் வரதன் அவரை வணங்கினான்.

"நன்றி கெட்டவனே! உனக்கு எவ்வளவு மதிப்புத் தந்தேன்? நேற்று எல்லாரையும் சிரிக்க வைப்பதாக நினைத்து என்னை அவமானப்படுத்தி விட்டாய். இனிமேல் இப்படிச் சிரிக்க வைக்க நீ உயிருடன் இருக்கப் போவது இல்லை. உன்னைக் கொல்லப் போகிறேன்" என்று கோபத்துடன் கத்தினார் அரசர்.

"அரசே! நான் உங்களை அவமானப்படுத்துவேனா? நகைச்சுவைக்காக அப்படிப் பேசினேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான். "நீ பேசியதைக் கேட்டது போதும். இனி உன் பேச்சை யாரும் கேட்கப் போவது இல்லை" என்ற அவர் காவலாளி ஒருவனைப் பார்த்தார்.

"வீதியில் திரியும் நாய் ஒன்றை இங்கே இழுத்து வா" என்றார். எலும்பும் தோலுமாக இருந்த நாய் ஒன்றைப் பிடித்து, இழுத்துக் கொண்டு வந்தான்.

தெரு நாயை அரசர் ஏன் இழுத்து வரச் சொன்னார் என்பது விதூஷகன் வரதனுக்கு புரியவில்லை.

"அந்த நாயை வைத்து அவர் என்ன தண்டனை தரப் போகிறார்? ஒன்றும் புரியவில்லையே" என்று எல்லோரும் குழம்பினர்.

"முட்டாளே! இந்தத் தெரு நாய்க்கும், உனக்கும் அதிக வேறுபாடு இல்லை. இந்த நாயை எங்கள் கண் முன்னால் நீ கொல்ல வேண்டும். அதே முறையில் நீயும் சாகப் போகிறாய்" என்றார்.

இதைக் கேட்டு அவையில் இருந்த எலலோரும் திகைத்தனர்.

"உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை. நாயை மண்டையில் அடித்துக் கொன்றால் அவனையும் அப்படியே கொல்வர். வயிற்றில் வாளைச் செருகினால் அவன் வயிற்றிலும் வாளைச் சொருகுவர். பாவம் அவன்" என்று நினைத்தனர்.

ஆனால், விதூஷகன் அமைதியாக இருந்தான்.

"விதூஷகனே! நீ உயிர் பிழைக்க எந்த வாய்ப்பும் இல்லை. இந்த நாயைக் கொல்ல எந்தப் படைக் கருவியைப் பயன்படுத்தப் போகிறாய்? வாளா? ஈட்டியா? அம்பா?" என்று கேட்டார். அவர் முகத்தில் புன்முறுவல் தெரிந்தது.

எல்லோரும் பதைபதைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாயின் அருகே சென்ற அவன் இரக்கத்துடன் அதைப் பார்த்தான்.

"நாயே! என்னை மன்னித்து விடு. எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்றான்.

அவன் அதை எப்படிக் கொல்லப் போகிறான் என்பதை எல்லோரும் ஆர்வமாகப் பார்த்தனர்.

அந்த நாயின் வாலைத் தன் இரண்டு கைகளாலும் பிடித்துத் தூக்கினான். தலைக்கு மேல் அதைச் சுழற்றினான். அப்படியே அதைத் தூக்கி எறிந்தான்.

சுவரில் வேகமாக மோதிய அது அப்படியே இறந்து விழுந்தது.

"அரசே! நீங்கள் சொன்னது போல இந்த நாயைக் கொன்று விட்டேன். அதே முறையில் நீங்கள் என்னைக் கொல்லலாம்" என்றான்.

அதே முறையில் அவனைக் கொல்ல முடியாது என்பது அரசருக்குப் புரிந்தது.

"உன் அறிவுக்கூர்மையை மெச்சுகிறேன். உன்னை உயிருடன் விடுகிறேன். மீண்டும் என்னைக் கேலி செய்து என் கோபத்திற்கு ஆளாகாதே" என்றார்.

"அரசே! நன்றி. இனி கவனமாக நடந்து கொள்வேன்... தங்களைப் புண்படுத்த மாட்டேன்" என்றான். அரசனும் மன்னித்து விட்டுவிட்டார்.

## நற்சிந்தனைகள்

➢வேகமாக ஓடுவோர் ஒரு கட்டத்தில் களைத்து நின்றுவிட வேண்டி வரும். சாவகாசம், நிதானம் என்பதே களைப்பின்றி பயணிக்க ஏற்ற மருந்தாகும்.

➢இந்த வாரமாவது உங்கள் வேக வியாதியை கொஞ்சம் ஒத்தி வையுங்கள், சாவகாசமாக, நிதானமாக செயற்படுவதில் உள்ள பரவசத்தை அனுபவியுங்கள்.

➢வெற்றியை புகழ்ந்து பாராட்டும் கலையை கற்றுக் கொள்ள வேண்டும். நாம் செய்ய வேண்டியதும், செய்ய முடிகிறதுமான காரியம் இதுவாகும்.

➢நாம் ஒழுங்காக செய்ததைவிட ஒழுங்குபட செய்யாத காரியத்தில் தான் கூடுதல் கவனம் செலுத்தி கவலைப்பட்டு வருகிறோம்.

➢ குறைகளை பார்ப்பதை விடுத்து, உங்கள் வெற்றிகளையும், மற்றவர் வெற்றிகளையும் பாராட்டப் பழகுங்கள்.

➢வெற்றிகரமாக வாழ விரும்பினால் செம்மையான செயற்பாடு என்பதற்கு விடைகொடுக்க வேண்டி வரும்.

➢ செம்மையோ செம்மை என்ற மனோபாவம் நம்மிடமிருந்து விடுபடுவதற்கான பயிற்சியை மேற்கொள்வோம். திருத்தம், செம்மை என்பதை விடுத்து நன்றாக சிறப்பாக செயற்படுவதில் நாட்டம் கொள்வோம்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.09 22

❖1877-யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக தமிழறிஞர் அருளப்ப முதலியார் நியமிக்கப்பட்டார்.

❖1965-இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐ.நாவின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.

❖1980-ஈரான் - ஈராக் போர்: ஈராக் ஈரானை முற்றுகையிட்டது.

❖1993-ஜோர்ஜியாவின் பயணிகள் விமானம் ஒன்று சுகுமி என்ற இடத்தில் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 108 பேர் கொல்லப்பட்டனர்.

❖1995-நாகர்கோயில் பாடசாலை சிறார்களின் படுகொலை: யாழ்.நாகர்கோயில் பாடசாலை மீது இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

❖1869-வலங்கைமான் சங்கரநாராயண ஶ்ரீநிவாஸ சாஸ்திரி, இந்திய அரசியல்வாதி, நிர்வாகி, கல்வியாளர் (இ. 1946)

❖1869-முகமது ஹபிபுல்லா, இந்திய அரசியல்வாதி, திருவாங்கூர் திவான் (இ. 1948)

❖1916-விந்தன், தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (இ. 1975)

❖1930-பி.பி.ஶ்ரீநிவாஸ், தென்னிந்தியத் திரைப்பட பின்னணி பாடகர் (இ. 2013)

❖1930-தி.ச.சின்னத்துரை, சிங்கப்பூர் உயர் நீதி மன்ற நீதிபதி (இ. 2016)

❖1931-அசோகமித்திரன், தமிழக எழுத்தாளர்(இ. 2017)

❖1933-அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, ஈழத்து எழுத்தாளர், நாடகக் கலைஞர்

❖1962-மார்ட்டின் குரோவ், நியூசிலாந்துத் துடுப்பாளர் (இ. 2016)

### இறப்புகள்

❖1539-குரு நானக், சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தவர் (பி. 1469)

❖1972-புலவர் குழந்தை, தமிழகத் தமிழறிஞர், புலவர் (பி. 1906)

❖2009-எஸ்.வரலட்சுமி, தென்னிந்திய நடிகை, பாடகி (பி. 1927)

❖2009-ஆர். பாலச்சந்திரன், தமிழகக் கல்வியாளர், கவிஞர்

### சிறப்பு நாள்

❖ விடுதலை நாள் (பல்கேரியா, உதுமானியப் பேரரசிடம் இருந்து 1908)

❖விடுதலை நாள் (மாலி, பிரான்சிடம் இருந்து 1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 90 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 75 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 80 | 70 | 120 |
| தக்காளி | 50 | 30 | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 | 50 |
| கோவா | 140 | 100 | 130 | 50 | 120 |
| கரட் | 120 | 140 | 150 | 140 | 240 |
| பூசணி | 80 | 40 | 50 | 30 | 60 |
| புடோல் | 70 | 60 | 60 | 30 | 80 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 95 | 120 |
| பாகற்காய் | 120 | 140 | 140 | 90 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 70 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 50 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 90 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 60 | 80 |
| கறிமிளகாய் | 80 | 80 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 100 | 60 | 80 |
| போஞ்சி | 150 | 140 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | — | 60 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 50 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 140 | 160 | 110 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 120 | 80 | 160 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 80 | 50 | 120 | 80 |

உறங்குகின்ற கும்பகர்ண உங்கள் மாயவாழ்வெல்லாம் இறங்குகின்ற இன்றுகாண் உறங்குவாய் உறங்குவாய்... – கம்பராமாயணம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழருக்கு இழைக்கப்படும் அநீதி பாராளுமன்றத்துக்கு வந்த அதிசயம்

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அதிகளவில் சித்தியடைந்தனர் என்பதற்காக அந்தப் பரீட்சையை இரத்துச் செய்கின்ற முயற்சி முன்னெடுக்கப்படுவதாக, ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்னாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு நடக்கின்ற அநீதியை ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் எடுத்துக்கூறி அதனைப் பகிரங்கப்படுத்தியமை உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும் அவர்கள் சொல்லாத விடயத்தை ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் கூறியிருப்பது ஆச்சரியமான விடயம் என்றே கூறவேண்டும்.

அதேவேளை இலங்கை நிர்வாக சேவையில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அதிகளவில் சித்தியடைந்தமையால், அந்தப் பரீட்சையை இரத்துச் செய்கின்ற முயற்சிகள் நடக்கின்றன என்பது கூட நம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்குமோ என்று சந்தேகிப்பதில் தவறில்லை.

என்ன செய்வது தேவையற்ற விடயங்களுக்குள் மூக்கை நுழைத்தால், தேவையான விடயங்களைக் கவனிக்க முடியாமல் போகும் என்ற தத்துவம் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் விடயத்தில் அச்சொட்டாக அமுலாகிறது என்பதை மட்டுமே இப்போதைக்குக் கூறமுடியும்.

இவை ஒருபுறம் இருக்க, போட்டிப் பரீட்சைகளில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அதிகளவில் சித்தியடைந்தால் அந்தப் பரீட்சையை இரத்துச் செய்வது அல்லது பெறுபேற்றை அனுப்பாமல் அப்படியே அமுக்கிவிடுவது என்ற சதி வேலைகள் இன்று நேற்றல்ல அது நீண்ட நெடுங்காலமாக நடந்தேறுகின்ற அக்கிரமத்தனமாகும்.

அண்மையில்கூட, கணக்காளர் பரீட்சையில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அதிகமாகச் சித்தியடைந்து விட்டனர் என்பதற்காக அந்தப் பரீட்சையை இரத்துச் செய்து அதே பரீட்சையை மீள நடத்தியமை யாவரும் அறிந்ததே.

எனினும் அந்தத் தகவல் பாராளுமன்றத்தில் அரங்கேறாமல் போயிற்று.

இருந்தும் தமிழ் மக்களுக்கு நடக்கின்ற வழமையான அநீதியின் ஒரு சிறுவிடயம் பாராளுமன்றில் ஒலித்திருப்பதும் அதனை ஜே.வி.பியின் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் பகிரங்கப்படுத்தியமையும் கௌரவர் சபையில் ஒரு விதுரன் எழுந்துள்ளான் போலும் என்று எண்ணத் தோன்றும்.

இதற்கு அப்பால்; நுண்கடன்களால் பெண் தலைமைத்துவ (தமிழ்) குடும்பங்கள் பெரும் பாதிப்படைகின்றன எனப் பாராளுமன்றத்தில் முதன்முதலில் தெரிவித்தது ஒரு சிங்கள அமைச்சர் என்பதையும் இங்கு கூறும்போது ஏதோவொரு வித்தியாசத்தை மெல்லியதாக உணர முடிகிறது.

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

## ரவீந்ர முதலிக குற்றச்சாட்டு

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வடக்கிற்கு சென்று அரசியல் கைதிகளை விடுவிப்பதாக பொய் வாக்குறுதி அளித்து அம் மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றுக் கொண்ட அரசாங்கம், நாட்டில் காணபபடும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்க மறுப்பதைப் போன்றே இந்த பிரச்சினைக்கும் தீர்வினை வழங்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் போராட்டம் 7 நாட்களை கடந்துள்ள நிலையில் அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது கண்டனத்துக்குரியதாகும். இவ்வாறு மௌனம் காப்பதன் மூலம் அரச்சாங்கம் இந்த விடயத்தை மூடி மறைக்க முயற்சிக்கின்றது.

அவ்வாறு மூடி மறைக்கப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது. அதற்காக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என சம உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரவீந்ர முதலிகே தெரிவித்தார்.

கொழும்பு சமூக, சமய நடு நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ம)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் விளையாட்டுக் குழுவினரால் அலுவலக நலன்புரிச் சங்கத்தினரின் அனுசரணையில் 2018ஆம் ஆண்டுக்கான வடக்கு- கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் இன்றும் நாளையும் அரியாலை புங்கன்குளத்தில் உள்ள காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் இறுதி நாள் நிகழ்வில் பிற்பகல் 3 மணிக்கு வெற்றியீட்டிய அணியினருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## வரட்சி நிவாரண விநியோகப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை

இலங்கையின் பல மாவட்டங்களில் நிலவிவரும் வரட்சியான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை துரிதப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோர் கலந்துரையாடியதன் பின்னர் இந்த நிவாரண பணிகளுக்காக 9 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரட்சியான காலநிலையால் வடமத்திய மாகாணத்தின் சுமார் 4 இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு தேவையான குடிநீர், உலர் உணவு உள்ளிட்ட ஏனைய நிவாரணங்களை வழங்குவதற்காக முப்படையினரின் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானத்தின்படி மேற்குறிப்பிட்ட நிவாரண பணிகளுக்காக மாதமொன்றிற்கு 2 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த நிதியை மாவட்ட செயலாளருக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் வரட்சி காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு துரித நிவாரணம் வழங்கும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டதுடன், மஹவிலச்சிய, துனுமடலாவ, எலபத்கம மற்றும் ஒயாமடுவ ஆகிய பிரதேசங்களுக்கு வரட்சி நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

கடுமையான வரட்சியால மக்கள் முகங்கொடுத்துள்ள இன்னல்கள் தொடர்பில் உடனடிக் கவனம் செலுத்தி நிவாரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியால் அனைத்து துறையினருக்கும் பணிபுரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு அனைத்து ஊடகங்களும் முன்வர வேண்டும் என்றும ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றிய தகவல் களையும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் பற்றிய விபரங்களையும் குறித்த மாவட்ட செயலாளர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 6 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** குருநகர், பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, பாசையூர், கொழும்புத்துறை வீதியின் ஒருபகுதி, இலந்தைக்குளம் வீதி, புங்கங்குளம் வீதி, சந்தனமாதா கோவில் வீதி, வலன்புரம், துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன்தோட்டம், பெரியதோட்டம், உதயபுரம், குருசோ வீதி, அச்சுக்கூட வீதி, பிரதானவீதியின் ஒரு பகுதி, ஆனைக்கோட்டை நவாலி வீதி, மூத்தவிநாயகர் கோவிலடி, நவாலி சென் பீற்றஸ் தேவாலயம், கலையரசி வீதி, அரசடி, வேலக்கைப் பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, கொத்துக்கட்டி, ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மின்சார நிலைய வீதி, பருத்தித்துறை வீதியில் ஒரு பகுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, சிறி நதியா நகை மாளிகை, **Raja Talkies, LOLC,** ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ், அன்னைநாகா பூட் சிற்றி ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

## விட்டுக் கொடுத்து...

- உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வழியில் போராடிக் கொண்டுதான் இருக்கின்றான். ஆனால் சுயநலத்தோடுதான் அதிகம் போராடுகிறான். உண்மையா? பொய்யா? என்பது அவரவர் மனச்சாட்சிக்கே தெரியும். 100 இற்கு 99 சதவீதம் சுயநலம் குடிகொண்டுள்ளது என்று சொன்னால் மிகையாகாது. காரணம் விட்டுக்கொடுத்து வாழும் பெருந்தன்மை கிடையாது. வெளியில் வேண்டுமானால் விட்டுக்கொடுத்து வாழ்கிறேன் என்று பேசலாம்.
- ஆனால் பலரில் சிலருக்குத்தான் அந்த விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் உள்ளது. வாழ்க் கையில் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் அல்லது புரிந்துகொண்டு வாழ்ந்தால் பிரச்சினைகள் தோன்றாது.
- தேர்வலும் விளையாட்டிலும் விட்டுக்கொடுபபது என்பது பொருந்தாது. பலருக்குப் பழி சொல்லத் தெரியுமே தவிர சிலருக்குத்தான் வழிசொல்லத் தெரியும். எனவே விட்டுக்கொடுத்து வாழப் பழகுங்கள். சுயநலமில்லாமல் பொதுநலத்தோடு வாழுங்கள்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- முதலில் ஒன்றைக் கேளுங்கள். பிறகு புரிந்து கொள்ளுங்கள். பின், எல்லா சஞ்சலங்களையும் விட்டு, புறஆதிக்கம் எதுவும் அணுகாதபடி மனதை மூடி வையுங்கள். அப்போது உள்ளத்திற்குள் உண்மை என்னும் பிரகாசம் ஒளிர்வதை உணர்வீர்கள்.
- பயமும், நிறைவேறாத ஆசைகளுமே எல்லாத் துன்பங்களுக்கும் காரணம். தனக்கு மரணமில்லை என்பதை அறியும்போது தான் இந்த பய உணர்வு நம்மை விட்டு அகலும்.
- மனிதன் கைம்மாறு கிடைக்கும் இடத்தில் மட்டுமே அன்பு காட்டுகிறான். எல்லாரிடமும் அன்பு காட்டுவதே முறையானது.
- ஆன்மிக நெறியில் பக்குவப்பட்ட மனிதர்கள் கைம்மாறு கருதாமல் அன்பை வெளிப்படுத்துவர். அவர்கள் கடவுளின் அருளைப் பெறும் தகுதியைப் பெறுகிறார்கள்.
- பற்றற்ற மனப்பான்மையை நீங்கள் பெற்றுவிட்டால் உங்களை நன்மையோ, தீமையோ எதுவும் நெருங்க முடியாது. சுயநலமே நன்மை, தீமை என்ற வேறுபாட்டை உருவாக்குகிறது.

# கோல்டன் ஸ்ராரை வீழ்த்தி ஆவரங்கால் மத்தி சம்பியன்





மலிபனின் அனுச்ரணையில் அச்சுவேலி றொக்கட் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றது ஆவரங்கால் மத்திய கிரிக்கெட் அணி.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தங்க நட்சத்திரங்கள் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர். இதன் அடிப்படையில் களம் புகுந்த தொடக்க வீரர் கஜன் மற்றும் கபில் அட்டகாசமாக ஆரமபித்து ஓட்ட வீதத்தை உயர்த்தினார்கள்.

ஆனாலும் அதற்கு இடம்கொடுக்க வில்லை மத்தியின் பந்து வீச்சாளர்கள். கணுயன் தனது முதலாவது விக்கெட்டை வேட்டையை கஜனராஜில் இருந்து ஆரம்பித்து கபில், வினோ என பெரிய இலக்கினை தகர்த்தெறிந்து ஹோல்ட் ஸ்ரார் அணிக்கு நெருக்கடியை கொடுத்தனர்.

பின்னர் சவாலாக இருந்த பந்துகளை சாதகமாக்கினான். தங்க நட்சத்திரத்தின் பிறேம் தனகுரிய பாணியில் அற்புதமாக ஆடி அசத்தி 29 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்களில் ஒன்பது இலக்குகளை இழந்து தங்க நட்சத்திரங்கள் 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பந்துவீச்சில் கணுயன் 3, துசி 2, ஜீவா, எழில், உசாந்தன் தலா ஒரு இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாட களம்புகுந்த மத்திய அணி அற்புதமான தொடக்க ஆட்டத்தை தொடங்கினர் துவா மற்றும் உசாந்தன்.

ஆனாலும் உசாந்தனின் இலக்கு தகர்க்கப்பட்டு பிரசன்னா களம்புகுந்து பெரும் சுவராக மத்திக்கு இருந்து தங்க நட்சத்திர வீரர்களுக்கு நெருக்கடி கொடுத்தனர் துவா மற்றும் பிரசன்னா. பின்னர் பிறேமால் அந்த இணைப்பாட்டத்தைத் தகர்த்தெறிந்தனர் ஹோல்ட்ஸ்ரார் அணியினர்.

இலக்குகளை பறிகொடுத்து நிலைகுலைந்த மத்தியை சரிவில் இருந்து மீட்டனர் எழில் மற்றும் ஜீவா. வெற்றியின்பக்கம் மத்தியைக் கொண்டு சேர்த்தனர். 13.2 பந்துப் பரிமாற்றத்தில் அந்த வெற்றியிலக்கை மிக இலகு அடைந்தனர மத்தியின் அணியினர். அதிகபட்சமாக துவா 44, எழில் 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஹோல்ட் ஸ்ரார் அணி சார்பாக பிறேம் 3 இலக்குகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. இறு தியில் ஆட்டநாயகனாக மத்தி யின் துவா தெரிவானார். தொடரின் சிறந்த பந்து வீச் சாளர் றொக்கட்டின் சாள்ஸ், சிறந்த துடுப்பாட்ட வீரர் முரசொலியின் செல்வன் தெரிவு செய்யப்பட்டார். (க)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் திருமணம் மற்றும் சுபகாரியங்கள் தங்கி நின்று செய்வதற்கும் விருந்தினர் தங்கி நிற்பதற்கும் ஏற்ற சகல வசதிகளுடன் கூடிய வீடு கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.

**077 703 5457** (5756)

உ
நாகபூசணி அருளுடன்

## அதிர்ஷ்ட லக்சுமியின் பார்வை மீண்டும் யாழ்.நகரில்

யாழ் நகரில் பல ஆண்டுகளாக தொடர்ந்தும் பரிசுகளை வழங்கி வரும் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் யாழ் நகர் விற்பனை முகவர்கள் திரு.**கனகலிங்கம்** திருமதி **திலகவதி** இணைந்து வழங்கும் தொடர் பரிசுகள்

**18.09.2018** அன்று **மஹஜன 20 லட்சம்**
**20.09.2018** அன்று **கொவிசெத ஒரு லட்சம்**
**20.09.2018** அன்று **அபிவிருத்தி தங்க நாணயம்**

என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்

(5752) **கனகலிங்கம் திலகவதி (முகவர்) யாழ்ப்பாணம்**


# மரண அறிவித்தல்



## திருமதி சிறீமுருகன் விமலரதி

விக்னேஸ்வரா வீதி, கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிறீமுருகன் விமலரதி அவர்கள் நேற்று *(21.09.2018)* வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - பாக்கியம் தம்பதிகளின் புதல்வியும் மற்றும் சிறீமுருகனின் (ஓய்வுநிலை மின் அத்தியட்சகர் இ.மி.ச) அன்பு மனைவியும் உமாகரன் (லண்டன்), யசிந்தா, கஜமுகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான கமலரதி, கமலநாதன் மற்றும் விமலநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(23.09.2018)* ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-3896)

**விக்னேஸ்வரா வீதி,**
**கரணவாய் கிழக்கு, கரவெட்டி.**

**தகவல்:-**
**சிறீமுருகன் (கணவர்) 021 226 1112**

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி - 2018

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02 கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் **(CIDA)**, கட்டட நிர்மாணத்துக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i) ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வட மாகாணத்துக்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் **(Black list)** சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள **CIDA** தரத்துக்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன வேலைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை 25.09.2018 - 09.10.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 25.09.2018ம் திகதியில் இருந்து 09.10.2018 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 10.10.2018ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு (26.12.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன்கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முக்வரியில் 03.10.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித் தீர்மானத்துக்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/06/PS DG(B)/2018/08 | Improvement of Siddha Ayurveda Hospital - Nallur, Passaiyoor, Thaddatheru, Town. Navanthurai. | 6.16 | 2 | C7 | 62,000.00 | 23.01.2019 |

**ஆணையாளர்,**
பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம். (C-3894) 21.09.2018

## முதியவரின் மோதிர...

அந்தவேளை வைத்தியசாலையில் வெள்ளை உடுப்புடன் சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் அங்கே நின்று முதியவரை அழைத்துச் சென்றுள்ளார்.

அதனை அவதானித்த பலரும் வைத்தியசாலைப் பணியாளரே அழைத்துச் செல்வதாக எண்ணியுள்ளனர். இந்நிலையில் முதியவரை அழைத்துச் சென்ற கர்ப்பவதி, முதியவரின் கையில் இருந்த தங்க மோதிரங்கள் இரண்டையும் அபகரித்துக்கொண்டு தப்பியோட முயன்றுள்ளார்.

முதியவர் குரல் எழுப்பிய நிலையில் குறித்த கர்ப்பவதி வேகமாக வெளியேறி வீதியால் பயணித்த பேருந்தில் ஏறித் தப்பியுள்ளார். இதனையடுத்து முதியவர் அங்கு நின்றவர்களின் உதவியை நாடியுள்ளார்.

இதனையடுத்து அங்கே நின்ற சில இளைஞர்கள் பேருந்தை விரட்டிப் பிடித்து அந்தப் பெண்ணை மடக்கினர்.

குறித்த பெண்ணை வைத்தியசாலைப் பொலிஸார் கைது செய்த நிலையில் முதியவரின் தங்க மோதிரங்கள் இரண்டும் மீட்கப்பட்டன.

பெண் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம)

## ரஜரட்டை பல்கலை...

யில் இருந்து இன்றுடன் ஒருவாரமாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை ரஜ ரட்டை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பலர் நேற்று சென்று பார்வையிட்டுள்ளனர்.

இவர்களை அரசியல் பிரமுகர்கள் பொது அமைப்புக்கள் சென்று சந்தித்துவருவதுடன் அவர்களுக்கு சார்பாக தமது ஆதரவினை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று அவர்களை பார்வையிட சென்ற சிங்கள மாணவர்கள் தாம் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு போராடுவோம் என்றும், அரசுக்கு இது தொடர்பில் எமது அழுத்தங்களை வழங்குவோம் என ஆதரவு தெரிவித்து சென்றுள்ளனர்.

இதேவேளை தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தொடர்ச்சியான போராட்டங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வீதியில் பயணித்த...

பருத்தித்துறை வீதியில் புறாப்பொறுக்கி பகுதியில் வாகனத்திலிருந்து இரவு 9 மணியளவில் இறங்கிய அவர் உடுப்பிட்டி பகுதியில் நடைபெற்ற மரண கிரியைகளில் பங்கெடுக்க வசதியாக வெள்ள வீதியூடாக கால்நடையாக சென்றுள்ளார்.

அப்போது இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் கொண்ட கும்பலொன்று குறித்த பொதுமகனை வழிமறித்து விசாரித்துள்ளது.

உடுப்பிட்டியில் கொள்ளைகள் நடப்பதாகவும் தாங்கள் சிவிலில் உள்ள பொலிஸார் எனக்கூறி விசாரணைக்கு வருகை தருமாறு மோட்டார் சைக்கிளில் அவரை ஏற்றிச்சென்றுள்ளனர்.

பின்னர் அப்பகுதியிலுள்ள பனங்கூடல் ஒன்றினுள் குறித்த பொதுமகனை மரமொன்றுடன் கட்டிவைத்த பின்னர் அவரிடமிருந்த பணம், கைத்தொலைபேசி என்பவற்றினை பறித்துக்கொண்டு குறித்த கும்பல் சென்றுள்ளது.

காலை வரை மரத்தில் கட்டுண்ட நிலையில் இருந்த குறித்த பொதுமகனை அங்கு சென்றிருந்த இன்னொருவர் கண்ணுற்று கட்டுகளை அவிழ்த்துவிட்டுள்ளார். (ம-9)

## ஐ.நா கூட்டத்தில்...

நோக்கி இன்றைய தினம் ஜனாதிபதி பயணமாகவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து நியாயமான சமாதானமான மற்றும் நிரந்தர சமூகத்திற்கான உலக தலைவர்களின் பொறுப்புகள் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த முறை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வு இடம்பெறவுள்ளது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் 4-வது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஜனாதிபதி இந்த விஜயத்தின் போது அவர் அரச தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் அந்தோனியோ குட்டரேஸ், பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட பலரை சந்தித்து இரு தரப்பு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## தமிழ்க் கட்சிகள்...

வருகின்றோம். இதில் சகலரதும் இணக்கப்பாடு ஏற்படும் நிலையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கி அரசியல் தீர்வை எட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் கூறினார்.

எமது ஆட்சியில் தற்பொழுது அரசியலமைப்புத் தயாரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளோம். சகல கட்சி களின்ஆலோசனைகளுக்கு அமைய நிபுணர்களின் வரைபு யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் கலந்துரையாடி இணக்கப்பாடொன்றுக்கு நாம் அனைவரும் வருவதே மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்கவுக்கு நாம் செய்யும் கௌரவமாக அமையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ம)

## அரசியல் தீர்வு...

தனது பதவிக்காலத்தினை நிறைவு செய்து நாடு திரும்பும் இலங்கைக்கான ஜப்பான் உயர்ஸ்தானிகர் கெனிச்சி சுகனுமா, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனை நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது உயர்ஸ்தானிகரை தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன் இந்த ஆட்சிக் காலத் தில்தீர்வு காணப்படவேண்டியஅனை த்து விட யங்களுக்கும் தீர்வு எட்டப்பட வில்லை எனவும், பொருளாதார ரீதியில் மக்கள் நெருக்கடி நிலைமையினை சந்தித்துள்ளதாக வும்தெரிவித்தார். எவ்வாறெனினு ம்கடந்தகால ஆட்சியோடு ஒப்பிடுகையில் மக்களுக்கான சுதந்திரமும் மற்றும் அரச நிர்வாகங்களின் சுயாதீனமும் குறிப்பிடத்தக்கவளவுமுன்னேற்றம் கண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நல்லிணக்க பொறிமுறைகள் மற்றும் செயற்பாடு கள்தொடர்பில் கருத்து தெரிவித்த இரா. சம்பந்தன், ஏற்றகாலத்தில் நியாயமான ஒரு அரசியல் தீர்வு எட்டப்பட்டிருந்தால் கடந்தகால யுத்த சூழ்நிலையை தவிர்த்திருக்கலாம்எனவும் துரதிர்ஷ்டவசமாக இன்று வரை அப்படியான ஒரு தீர்வு எட்டப்படவில்லை எனவும் தெரிவித்தார். ஒருபுதிய அரசியல் யாப்பினூடாக நியாயமான ஒருதீர்வினை அடையாத பட்சத்தில் இலங்கை முன்னேறி செல்லமுடியாது எனவும்ஒரு செழிப்பான எதிர்காலத்தினை ஏற்படுத்த வேண்டுமேயாகில் அரசியல் தீர்வு இன்றியமையாத ஒன்றாகும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஜப்பான் தொடர்ச்சியாக கொடுக்கும் அனைத்து ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்த இரா.சம்பந்தன் விசேடமாக இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர்ய சூசி அகாசி அவர்களின் நட்பிற்கும் செயற்பாடுகளுக்கும் தனது நன்றிகளை தெரிவித்தார்.

பொருளாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவலியுறுத்திய இரா. சம்பந்தன் விசேடமாக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஜப்பான் இலங்கையின் நல்லிணக்க மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் தொடர்ந்தும் அக்கறையோடு பங்காற்றும் என இலங்கைக்கான ஜப்பானியதூதுவர் தெரிவித்தார். (ம)

## சிங்கள மக்கள்...

திரன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை வழங்கிய பிரத்தியேக பேட்டியொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையான காலப்பகுதியில் நான் சிங்களப் பிரதேசங்களில் சமஷ்டி குறித்து பேசியபோதெல்லாம் அதற்கு ஆதரவாகவே சிங்கள மக்களின் தரப்பிலிருந்து அவர்களின் கருத்துக்கள் வெளிப்பட்டிருந்தன.

சமஷ்டி முறைமையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா எனவும் கண்டியத் தலைவர்களும் இலங்கைக்கு பொருத்தமானது சமஷ்டி முறையே எனக் கூறியிருந்ததையும் நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிங்கள மக்களிடையே எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

எனவே சிங்களவர்கள் வேண்டும் என்று கூறியிருந்த சமஷ்டி சிங்கள மக்களுக்கு எதிரானதாக இருக்காது என்ற கருத்தினை நான் தெளிவாகப் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

எனவே இவ்வாறான நிலைமையில் சிங்கள மக்கள் சமஷ்டி முறைமையை ஓர் பூதாகாரமான விடயமாக எடுத்துக் கொள்வார்கள் எனவும் நான் எண்ணவில்லை.

இதேவேளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி அரசியலமைப்புப் பேரவையின் கூட்டமொன்றை நடத்துவதென்றும், இதில் இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் முழுமையான வரைபை நிபுணர்கள் தயாரித்த வரைபாகச் சமர்ப்பிப்பதென்றும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## விபத்தில் காயம்

(சாவகச்சேரி)

நேற்று வெள்ளிக்கிழமை மாலை. 3 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதி தம்பு தோட்டம் பகுதியில் மாடு வீதிக்கு குறுக்காகச் சென்றதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் மாட்டுடன் மோதிக் காயமடைந்துள்ளார்.

இதில் விடத்தற்பளை மிருசுவிலைச் சேர்ந்த 40வயதான ந.ரஞ்சன் என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் (ம-30)

## கேரள கஞ்சாவுடன்...

அருகில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கேரள கஞ்சா வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் இருந்து ஒரு கிலோ 634 கிராம் கேரள கஞ்சா இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்தை நிறுத்தி சோதனையிட்ட போது குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மாத்தளை-கலுதாவல மற்றும் கிளிநொச்சி-பாரதிபுரம் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## தமிழரசுக் கட்சி...

உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் தனது முகநூலில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் கூலை அச்சுறுத்தியதாக எனக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள குற்றவியல் வழக்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மற்றொரு அரசியல் பழிவாங்கல் செயற்பாடு ஆகும்.

எனக்கெதிரான குறித்த வழக்கேட்டின் பிரதி தமிழரசுக் கட்சியின் வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சயந்தனால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழர் விரோத சக்திகளுடன் கூட்டிணைந்துள்ள அக்கட்சி எனக்கும் என்சார் கட்சிக்கும் எதிராக எடுக்கக்கூடிய இத்தகைய நடவடிக்கைகள் நாம் மிகச் சரியான திசையிலேயே பயணிக்கின்றோம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

எனினும் எமக்கெதிராக இவர்கள் எடுத்துக்கொண்டுள்ள ஆயுதம் மிகப் பலவீனமானது என்பதை காலம் அவர்களுக்கு உணர்த்தும்.

கடந்த காலங்களிலும் நேர்மையாக செயற்பட்ட வீ.நவரட்ணம் போன்றவர்களுக்கெதிராக இவ்வாறான செயற்பாடுகளை தமிழரசுக் கட்சி செய்துள்ளது.

ஈற்றில் அது எங்கு சென்று முடிந்தது என்ற வரலாற்று பாடத்தை அவர்கள் கற்க மறுக்கின்றனர் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## மாகாண சபை...

மாகாண சபைத் தேர்தல் எல்லை நிர்ணயம் தொடர்பில் மேலும் விரிவாக ஆராய்ந்து இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய தேவைப்பாடு உள்ளமையினாலேயே இந்தக் கால அவகாசம் தேவை என்றும் அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போதே எல்லை நிர்ணயம் தொடர்பான குழு விடயத்தை தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தவேண்டியது அவசியமானது என சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ம)


கொவிசெத

திகதி 2018.09.21
சீட்டிழுப்பு இலக்கம் 1889

H 12 36 56 57

மஹஜன சம்பத

திகதி 2018/09/21
சீட்டிழுப்பு இலக்கம் 3751

T 5 3 4 2 8 3

மெகா பவர்

திகதி 21/09/2018
சீட்டிழுப்பு இலக்கம் 282

வெற்றி இலக்கங்கள்

Z 08 05 15 24 79

தேசிய லொத்தர் சபை

# கூறுவிலை கோரல்

23.09.2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி ஸ்ரீஅரசகேசரிப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா வின் போது உடைக்கப்படும் தேங்காய் விற்பனை செய்யப்படவுள்ளது. உடைத்த தேங்காய் ஒரு கிலோவுக்கான தங்களது கூறு விலையை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதற்கான படிவத்தை ஆலயத்தில் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி
2018.09.18 **ஆலய பரிபாலன சபை** (C-3899)

# ஆட்கள் தேவை

எரிபொருள் நிரப்புனர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அருகில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை. **தொடர்பு - 077 703 3039, 077 670 1568**

(C-3877)

# விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச்சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய கடை விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு : 075 643 4535, +0016478919714**

(5735)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org**

(5740)

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

**அண்ணா பொதிகள் சேவை**

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-3863)

**021 221 5656** யாழ்ப்பாணம் **077 888 9388**

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

## பயிற்சியுடன் வேலை வாய்ப்பு

பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்

(C-3828)

**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்** **V2 TRAVELS**

**எமது கிளைகள்**
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை

- எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயற்சிகள் உண்டு.
- விரும்பியவர்கள் பயற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **0768226236** v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS (C-3873)

**0768226240**

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS


## ஒக்டோ...

பரீட்சைப் பெறுபேறுகள் இந்த மாத நடுப்பகுதியில் வெளியாகும் எனத் தெரிவிக்கப்பட்ட தகவல் உண்மைக்குப் புறமபானது என்றும் அமைச்சுச் சுட்டிக் காட்டியுள்ளது. (ம)


## சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை

உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா? அழையுங்கள்... உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம். (5754)

**0778380158, 0764719951, 0217223535, 0217223636**

M.S.V **பாம் டீலேர்ஸ்** - கொக்குவில்

# கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.

**GUNA BEST PC 0779086737**

லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்

**LAPTOP COMPUTERS CCTV CAMERA REPAIR SALE PURCHASE INSTALLATION**

கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம். (C-3897)


## மோட்டார்...

(வயது-28) என்ற இளம் குடும்பத்தலைவரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிள் ஓட்டுநரும் சம்பவ இடத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின விபத்து சேவை பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தை என உறவினர்கள் கூறினர்.

சடலம் தற்போது அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணையினை அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம)


# பதவிக்கான தேடல்

**Job ! job ! job !.... 077 848 5328**

நீங்கள் O/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 25 பேருக்கு முன்னுரிமை. நிர்வாக அதிகாரி, செயல்திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர்,மேற்பார்வையாளர்.

- அனுபவம் அவசியமற்றது
- வயதெல்லை 18-35 (5755)
- தங்குமிடவசதிகள் உண்டு.

# விற்பனைக்கு

நெல்லு உடைக்கும் இயந்திரம், அரிப்பான், 3 மோட்டார்கள் (புதியவை) மற்றும் 1 கொப்பறா உடைக்கும் இயந்திரம், பேக்கரிக்கு உரிய மேசைகள் இரண்டு, 9 அச்சு தட்டுகள் (புதியவை), சான்விச் பாண் அச்சுகள் (புதியவை) உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு - 077 999 7814** (C-3898)

*யாழ்ப்பாணத்தில்*

# 1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2

## காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் * வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

### 1 ஏக்கர் – 16 பரப்பு

- 40 தென்னை • 40 - 60 தேக்கு
- 20 கஜூ மரம் • 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**25 இலட்சம்**

(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)



### 2 ஏக்கர் – 32 பரப்பு

- 80 தென்னை • 80 - 90 தேக்கு
- 40 கஜூ மரம் • 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**47 இலட்சம்**

(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் **5 வருடங்கள் பராமரிப்பு** செய்து தரப்படும்!
- 30 அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

(C-3891)

**பொதுவான வசதிகள்**

பொது விடுதி • உணவகம் • உடற்பயிற்சிக்கூடம் • நீச்சல் தடாகம் • விளையாட்டுத்திடல் • நடைபயிற்சிக்கான பாதை • மீன்பிடி குளம் • முந்திரிகை தோட்டம் • மூலிகைத் தோட்டம்






**078 284 5000** **021 492 7778**

***551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்***

Good Gift Property Developers (Pvt) Ltd

சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

Reg. No.: PV 115306


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.